# தமிழ்ப் பொழில்

**தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு**

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௲௯௯௨ | மலர் |
| --- | --- | --- |
| ௩௭ | பிலவ, மார்கழி.<br>1961 டிசம்பர், ஜனவரி. | ௬ |


## மொழி அமைப்பைக் காணும் முறை

**செ. வை. சண்முகம் M.A., M. Litt., Dip. in Ling.,**

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

விளக்கமுறை மொழிஇயல், மொழியின் ஒலி ஒழுங்கு முறை, இலக்கண ஒழுங்குமுறை, புணர்ச்சி ஒழுங்குமுறை ஆகிய மூன்றையும் கண்டு அதன் அமைப்பை எளிய முறையில் விளக்கும். இதையே, மற்றொரு முறையில் மொழிக் கூறுகளை யும் (ஒலியன், சொல்லுறுப்பான்) அவற்றிடையே தொடர்பை யும் விளக்குவது என்றும் கூறலாம்.

மொழியின் அமைப்பு மொழிஇயல் வாணரின்கண்டு பிடிப்பன்று; மனிதனின் தருக்க ரீதியான சிந்தனைக்கு உட் பட்டதுமன்று; மொழியில் இயல்பாக அமைந்திருப்பது; அவ்வம்மொழி பேசும் மக்கள் உணர்ந்திருப்பது; உணர்ந்து அவர்களே பயன்படுத்துவது.

மொழிஇயல் வாணர்க்கு ஒரு மொழியின் நூற்றுக் கணக்கான சொற்களையும் சொற்றொடர்களையும் அடிப்படை யாகக் கொண்டு அவற்றிடையே ஒழுங்கு முறைகளை விளக்கு வதுதான் கடமை. வேண்டுமானால், அம் மொழியில் வழங்கும் பிறர் எடுத்துக் கூறாத பயிற்சிகளையும் வழக்குகளையும் எடுத்துக் காட்டலாமே தவிர ஒருவர் புதியதாக ஒன்றும் படைத்துச் சொல்லிவிட முடியாது. மொழியில் இயல்பாக இருப்பதைக் கண்டு எடுத்துக்கூற வேண்டியதுதான் அவர் களின் வேலை. சில சமயங்களில் அமைப்பை விளக்குவதற்கு அவர்கள் சில உத்திகளைக் கையாளுவர். சான்றாக, பன்மைப் பெயர்கள் வடிவத்தில் ஒருமைப் பெயர்களிலிருந்து சில சொல்லுறுப்பான் மிகுதியினால் வேறுபடும். ஆண்கள், ஆண்; நூல்கள், நூல் என்பனவற்றில் பன்மைப் பெயர்கள் என்ற உறுப்பானை மிகுதியாகக் கொண்டுள்ளன. அதனாலேயே அவை பன்மைப் பொருளைத் தருகின்றன. சில பெயர்களில்

அவ்வாறு பன்மைக்கும் ஒருமைக்கும் வடிவ வேறுபாடு இல்லா விட்டால் மொழி இயல்வாணர் பூஜ்யம் இருந்து பொருள் மாறுபடுத்தியதாகக் கொள்வார். இவ்வாறு, பொதுவாக விளக்குவதற்குப் புதியதாகப் படைத்துக் கொள்வார்களே அல்லாமல் மொழியின் அமைப்பை அவர்கள் படைக்க முடியாது.

மொழியின் அமைப்பு தருக்க முறைக்கு ஒத்ததன்று. தமிழில் அவன், அவள்; மகன், மகள் போன்ற சொற்களில் னகரம் ஆண்பாலையும் ளகரம் பெண்பாலையும் உணர்த்துதலை அறியலாம். ஆனால் ஒருவன் என்பதற்கு இணையான பெண் பால் ஒருத்தி, என்பதே. தருக்க முறைப்படி வாதாடினால் ஒருவள் என்ற வடிவம் இருக்க வேண்டும் எனலாம். மொழி அமைப்பு, மொழியின் வழக்குகளைக் கொண்டு அமைக்கப்படு வதால் எப்படி இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை: எவ்வாறு இருக்கிறது என்பதே முக்கியம். எனவே மொழி அமைப்பு ஆராய்ச்சியில் தருக்க முறையான சிந்தனைக்கே இடம் கிடையாது.

மொழியின் அமைப்பை அம்மொழி பேசும் எல்லா மக்களும் உணர்ந்திருப்பதால்தான், மொழியில் புதிய சொற்கள் வரும்பொழுது அவற்றைப் பல முறையிலும் பயன் படுத்த முடிகிறது. தமிழில், ரேடியோ, நயா பைசா போன்ற புதிய சொற்கள் வந்தபொழுது பொது மக்கள் மொழி இயல் வாணர்களையோ, இலக்கண ஆசிரியர்களையோ கேட்டுக் கொண்டு அவற்றின் பன்மை, வேற்றுமை ஆகிய வடிவங் களைக் கையாளவில்லை. அல்லது, அவர்கள் எல்லோரும் இலக்கண அறிவு பெற்றிருந்தமையினால் பயன்படுத்தினர்கள் என்று சொல்லவும் முடியாது.

இக் காரணங்களால்தான், இன்றைய மொழி இயல் வாணர்கள், மொழி அமைப்பைக்காண அம்மொழி பேசும் மக்கள் நோக்கிலிருந்து ஆராய வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி வருகிறார்கள்.

உலகிலுள்ள எல்லா மொழிகளும் ஒலியன், சொல்லுறுப் பான் என்ற இரு மொழிக் கூறுகளை உடையன. ஆனால் அவற்றின் தன்மை, அவற்றின் வருமிடம் அல்லது அவற்றிற் குள்ள தொடர்பு, அவற்றிற்குள் ஒவ்வொன்றின் பங்கு முதலிய வற்றில் ஒவ்வொரு மொழியும் ஒவ்வொரு தன்மையின. எனவே மொழிக் கூறுகளைக் கண்டுபிடிப்பதோடு அவற்றின் மேற்கூறிய மூன்று பண்புகளையும் காணலே மொழி அமைப்பு ஆராய்ச்சியாகக் கருதப்படும்.

மொழிக் கூறுகள் என்பவை அம்மொழியில் வேறுபடுத்தி அறியப்படுவன.

தமிழில், கடை, சடை, தடை, நடை, படை, மடை, விடை முதலிய சொற்களின் பொருள் வேறுபாடுகள் முதலில் உள்ள மெய்யொலியின் வேறுபாட்டாலேதான் அறிய முடிகிறது. எனவே அவ்வொலிகள் தமிழில் ஒலியன்களாகக் கருதப்படு கின்றன. இவ்வாறே, வாய், வார், வால், வாழ், வாள், வான் ஆகிய சொற்களில் இறுதியிலுள்ள ஒலிகளே ஒன்றிலிருந்து மற்றொரு சொல்லை வேறுபடுத்தி அறிந்து அதன் மூலம் பொருள் வேறுபாட்டை உணர்ந்து கொள்ளப் பயன்படு கின்றன. இவ்வாறே ணகரமும் சொற்களை வேறுபடுத்தி அறிய உதவுகிறது. ஆயினும் நகரமும் னகரமும் இன்று வேறுபடுத்தி அறியப் பயன்படாததால் ஒலியனாகக் கருத முடியாது.

இன்றைய பேச்சுத் தமிழில் மெய்யொலிகளில் வேறு சில வேறுபாடும் வந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. பாலம் என்ற சொல் இரு பொருளில் ஒலி வேறுபாட்டாலேயே உணர்த்தி வருதல் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. ஒலிப்பிலா ஒலியாக (Voiceless Sound) முதலில் பகரம் உச்சரிக்கப்படும்பொழுது இரக்கம், புண்ணியத்திற்கு மாறுபட்டது என்ற பொருளும் ஒலிப்புடைய ஒலி (Voiced Sound) யாகக் கூறும்பொழுது முகபாவத்தையும் குறிக்கிறது. [இதனால் சில பத்திரிகைகள் இரண்டாவது சொல்லில் உள்ள பகரத்தைத் தடித்த எழுத்தில் அச்சிடுவதைப் பலரும் கவனித்திருப்பர்.] இவ்வாறே ஏனைய சில ஒலிகளும் மொழியில் சொற்களை வேறு படுத்தி அறியப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. விசி (Visi), விஜி (Viji) என்னும்போது முன்னது பலகையும் பின்னது ஒரு பெயரையும் குறிக்கிறது. தா (da), தா (da) என்னும் இரண்டும் கொடு, அதோ என்ற இரு பொருளையும் குறிக்கிறது. இவ்வேறுபாடுகளைப் பலரும் அறிந்து பயன் படுத்துகிறார்கள். எனவே இவற்றையும் தமிழில் உள்ள ஒலியன்களாகக் கருத வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. ஆகவே, பொதுவாக ஒரு மொழியில் உள்ள ஒலியன்கள், அம் மொழியில் சொற்களை வேறுபடுத்தி அறிவதற்குத் துணை செய்யும் ஒலிகளே.

இவை மொழிக்கு மொழி மாறுபடும் தன்மையை மற்றொரு சான்று மூலம் அறியலாம். தமிழிலும் ஆங்கிலத்திலும் பகர ஒலி (P) உண்டு. ஆனல், தமிழில் வழங்கும் ஒலி மூச்சொலி (Aspiration) அற்றது; ஆங்கில மொழியில் வழங்கும் ஒலி மூச்சொலி உடையது. இதே இவ்வொலியின் தன்மை வேறு பாடு. தமிழில், பகர ஒலி, மற்றொரு மெய்யுடன் மயங்காது. ஆங்கிலத்தில் மயங்கி வரும் (சான்று Spin); அத்துடன் சொற் களில் இறுதியிலும் வரும். எனவே இரண்டு மொழியிலும் வழங்கும் ஒலி வருமிடத்தாலும் மாறுபட்டுள்ளது என்பது

தெளிவு. இது போலவே, தமிழில் உள்ள பகர ஒலியின் ஏனைய ஒலிப்பிலா வல்லொலிகளோடும், ஒலிப்புடைய வல்லொலிகளோடும் வேறுபட்டு வருகின்றன. ஹிந்தியில் உள்ள பகர ஒலியன் என்பது ஒலிப்பிலா ஒலிகளில் மட்டுமே மூச்சொலி உடைய பகரத்தோடும் மூச்சொலி அற்ற பகரத்தோடும் வேறுபட்டு வருகிறது. அவ்வாறே ஒலிப்புடைய ஒலியில் இவ்விருவகையிலும் வேறுபாடு உள்ளது. அதாவது இரண்டுவகை வேறுபாடே இன்றைய தமிழில் உண்டு. ஹிந்தியில் நான்குவகை வேறுபாடு உண்டு. எனவேதான் மொழி இயல்வாணர் எல்லா மொழிக்கும் பொதுவான ஒலியன் என்று ஒன்று இருப்பதாகக் கொள்ளக் கூடாது. என்ற கருத்தையும் வலியுறுத்துகிறார்கள்.

சொல்லுறுப்பான் என்ற மொழிக்கூறும் அவ்வாறு வேறு படுத்தி அறியக் கூடியவையே.

உலகில், எத்தனையோ வகை நிறங்கள் உள்ளன. ஆனால் அவற்றைக் குறிக்க உள்ள சொற்கள் மிகக் குறைவாகவே உள்ளன. ஆங்கிலத்தில் நிறங்களை ஏழுவகையாகத்தான் பாகுபாடு செய்துள்ளார்கள். தமிழில், வெள்ளை, மஞ்சள், சிகப்பு, பச்சை, கருப்பு ஆகிய ஐவகையாகப் பிரித்தே அறிகிறோம். அறுவகையாகவும், நான்கு வகையாகவும், இருவகையாகவும் பிரித்து வேறுபடுத்தி அறியும் மொழிகளும் இருக்கின்றன. இவ்வாறு, ஒவ்வொரு மொழியும் சொல்லுறுப்பான்களால் எல்லாவற்றையும் வேறுபடுத்தி அறிகிறது என்பதைக் கண்டுபிடிப்பதே மொழியின் சொல்லுறுப்பான்களைக் கண்டு பிடிப்பதாகும்.

மொழி, பொருள்களை மட்டுமன்றி, எதிர்மறை, காலம், பால், முதலிய இலக்கணப் பொருள்களைக் கூட தனிச் சொல்லுறுப்பானல் மட்டும் வழங்காது அதற்குரிய வேறு சொல்லாலோ அல்லது அடையாலோ வேறுபடுத்தலும் உண்டு. எதிர்மறையை செய்யான், நடக்காது போன்ற சொற்களில் உணர்த்துவது இலக்கண உறுப்பு மூலம் என்பர். ஆனல் செய்யவில்லை, செய்யமாட்டான்; நடக்கவில்லை, நடக்க மாட்டான் ஆகிய இடங்களில் சொற்றொடர் மூலம் அதே கருத்தை உணர்த்துகிறோம். எனவே இலக்கணக் கூறுகளை எவ்வாறு மொழியில் வேறுபடுத்தி அறிகிறார்கள் என்பதும் மொழி அமைப்பைக் காணும்போது ஆராய வேண்டும். சொல்லுறுப்பான் மூலம் இலக்கணப் பொருளை உணர்த்துவதே ஒரு மொழியின் இலக்கணப் பாகுபாடுகள் என்று கருதப் படும். இம்முறை ஏனைய பொருளுக்கும் பொருந்தும். பச்சை நிறத்தை வேறுபடுத்த விரும்பினல் இலைப் பச்சை, கிளிப் பச்சை, பாசிப் பச்சை என்றெல்லாம் அடை கொடுத்து கூறு

கிறோம். புதிய நிறங்களைக் குறிக்க விரும்பினால் கத்திரிப்பூ நிறம், கனகாம்பர நிறம் என்றும் கையாண்டு நிற வேறுபாட்டை செய்கிறோம். எனவேதான், தனிச் சொல்லுறுப்பானால் என்னென்ன பொருள் உணர்த்துவர், அடைகொடுத்து அல்லது சொற்றொடர் மூலம் என்னென்ன கருத்தை உணர்த்துவர் என்ற பாகுபாடு அவசியமானது. இவ்வேறுபாடு செம்மையாக அறியாமையினால்தான் பழந்தமிழில் செயப்பாட்டு வினை (Passive Voice) உண்டு என்பதும் இல்லை என்பதும் ஆகிய இரண்டு கருத்துக்கள் உள்ளன. தொல்காப்பியத்தைப் பொறுத்த வரையில் படு என்ற செயப்பாட்டுவினை தனிச் சொல்லாகவே இருப்பதால் பழந்தமிழில் செயப்பாட்டுவினை இலக்கணக் கூறாக இல்லை. சொற்றொடர் மூலம் அக்கருத்து கூறப்பட்டது என்ற கருத்து இன்று ஆதரிக்கப்படுகிறது.

சொல்லுறுப்பான்கள் வருமிடம் பற்றித் தெரிந்துகொள்ள அவற்றைப் பாகுபாடு செய்துகொள்ள வேண்டியுள்ளது. ஏனெனில் சில சொல்லுறுப்பான் சில சொல்லுறுப்பானொடு வருவதே இல்லை; வேறு சிலவற்றுடனேயே எப்பொழுதும் வருகிறது. காலங்காட்டும் விகுதிகள், எதிர்மறை விகுதிகள், செயப்பாட்டுவினை விகுதிகள் போன்றவை வினை அடிச் சொல்லுறுப்பானோடேயே வருகின்றன. எண், வேற்றுமை விகுதி முதலியன பெயர்ச் சொல்லுறுப்பானோடேயே வருகின்றன. எனவே சொல்லுறுப்பான்களின் வருமிடம் அறிந்துகொள்ள எந்தெந்த சொல்லுறுப்பான்கள் எவ்வகைச் சொல்லுறுப்பானோடு வரும் என்பதும் வரையறுத்துக் கொள்ளவேண்டும்.

மொழியின் சொற்றொடர் அமைப்பு (Syntox) ஆராயும் முறைபற்றி மொழி இயல் அறிஞர்களிடையே கருத்தொற்றுமை இல்லை. எனவே சொற்றொடர் அமைப்பைக் காண்பது பற்றிப் பொதுவாகக் கூற இயலாது.

புணர்ச்சி ஒழுங்குமுறை என்பது பல்வேறு சொற்களிடையே காணப்படும் வடிவ வேறுபாட்டைப் பொது நிலையில் விளக்குவதே. மொழியிலுள்ள வடிவு வேறுபடும் சொல்லுறுப்பான்களை எடுத்து அவற்றிடையேயுள்ள வடிவ வேறுபாட்டை புணர்ச்சி விதிகள் மூலம் விளக்க வேண்டும். தமிழில் இரண்டு உயிர்கள் சேர்ந்து வந்தால் இடையே உடம்படுமெய் என்று யகரமோ வகரமோ வரும். சில இடங்களில் அவை, இக்காலத் தமிழில் வருவதில்லை. ஆனால் வடமொழியில் இரண்டு உயிரும் மற்றொரு உயிரொலியாக மாறும். எனவே ஒவ்வொரு மொழிக்கும் உரிய புணர்ச்சி விதிகளை அமைப்பதும் மொழி அமைப்பின் ஆராய்ச்சியின்பாற்பட்டதே.

# மரணம் இலாப் பெருவாழ்வு

புலவர். திரு. வி. சச்சிதானந்தம் சோழவேந்தான்

உலகிலுள்ள உயிருள்ள பொருள்கள் யாவும் வாழ வேண்டும் என்றே விரும்புகின்றன—வாழ்கின்றன. மனிதர்களைத் தவிர மற்றைய உயிர்கள் வாழ்க்கையைப்பற்றி வருந்துவதுமில்லை—கருதுவதுமில்லை. மனிதன் தான் வாழ்க்கையைப் பற்றி எண்ணுகின்றான்: வழி முறைகளை வகுக்கின்றான்; விதிகளை ஏற்படுத்துகின்றான்; வாழவும் தொடங்குகின்றான். வாழ்க்கையில் ஏற்படுகின்ற இன்பத் துன்பங்களை உணர்கின்றான். அவற்றை ஆக்குதற்கும் போக்குதற்கும் உரிய திறம் மனிதனிடத்தேதான் உண்டு. நன்மை, தீமைகளை உணர்ந்து நன்றின் பால் செல்லும் நிலையை மேற்கொண்டான். தாமே இன்பம் அனுபவிக்க வேண்டும் என்ற தன்னலம் மனிதனிடம் குடிகொண்டது. தனக்குச் சாதகமாக உயர்வு தாழ்வு என்ற வேற்றுமைகளையும், முதலாளி, தொழிலாளி என்ற முறைகளையும் ஏற்படுத்தினான். பொய்யும் பொறாமையும் பூசலும் மனித வாழ்வில் புகுந்து மாசுபடுத்தின. நல்லறிஞர்கள் கூட வாழ்க்கையைப் பற்றி வெறுக்கும் அளவிற்கு மனித வாழ்வு அமைந்து விட்டது. "வாழ்க்கை

---

இவ்வாறு, அவ்வம் மொழியில் வேறுபடுத்தி அறியக்கூடிய கூறுகளைக் கொண்டு அவற்றின் ஒழுங்கு முறையைக் காணுதல் மொழி அமைப்பைத் தெளிவாக அறியப் பயன்படும்; அத்துடன் ஒரு மொழியைப் பிறருக்குப் பயிற்றுவிக்கவும், நாம் பிற மொழியைப் பயிலவும் விளக்கவுரை மொழிஇயல் பெரிதும் துணை செய்யும். இப்பொழுது நாம் பிற மொழியைக் கற்றுக்கொள்ளும்போது அம் மொழியிலுள்ள எழுத்துக்களுக்கு முக்கியம் கொடுக்கிறோமே தவிர அம் மொழியில் என்னென்ன ஒலிகள் வேறுபடுத்தி அறிகிறார்கள், அவற்றின் தன்மை என்ன? ஆகியவற்றில் கருத்து செலுத்துவதில்லை. அதனால்தான் பல ஆண்டுகள் படித்தும் மற்றொரு மொழியைச் சரியாகப் பேசத் தெரியாதவராக உள்ளோம். இப்பொழுதுள்ள குறை மொழியின் உச்சரிப்பில் மட்டுமன்றி மொழியின் சொற்றொடர் அமைப்பிலும் உள்ளது. சில சமயங்களில் நாம் பேசும் பிற மொழி, அம்மொழியைத் தாய் மொழியாகக் கொண்டோருக்கே புரிவதில்லை. இதற்குப் பல்வேறு காரணங்கள் இருப்பினும் உச்சரிப்பு முறையும் சொற்றொடர் அமைப்பு முறையும் நம்முடைய தாய் மொழியை ஒட்டி அமைந்து விடுவதுதான் முக்கிய காரணம். எனவேதான், மொழியின் அமைப்பு ஆராய்ச்சி இன்று பல அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது

என்பது ஓர் அந்நிய மொழி; அதனை எல்லா மனிதர்களுமே தவறான முறையில் உச்சரிக்கிறார்கள்"—என்று உளம் நொந்து உரைக்கின்றான் கிரிஸ்டோபர் மார்லி என்ற மேலைநாட்டு அறிஞன்.

வாழ்வினை அகவாழ்வு, புறவாழ்வு என இருவகையாகப் பிரிக்கலாம். தொண்டு, தியாகம், பண்பு முதலாயின அகவாழ்விற்குரியன. பெண்டு, பிள்ளை, பொருள் முதலாயின புறவாழ்விற்குரியன. இவ்விருவகை வாழ்வையும் ஒழுங்காக அமைத்த வாழ்வே பெருவாழ்வு—சிறந்த வாழ்வு என்று சொல்லப்படும். சமுதாயத்தில் புறவாழ்வின் நிலையைக் கொண்டே ஒரு மனிதனின் நன்மை தீமைகளைக் காணமுடிகிறது. உள்ளத்திலே ஏற்படுவதை ஓரளவு மறைத்தும் வாழ முடியும். இவைதான் உண்மை என்று உணர்ந்துகொள்ள முடியாது. தீய குணமுள்ளவன்கூட நல்லவனைப்போல நடிப்பான். இதைக் கருதியே வள்ளலார் "உள்ளொன்று வைத்துப் புறம் மொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்"; என்றும் கூறுகின்றார். எனவே புறத்திலே இருக்கும் தோற்றத்தைக் கொண்டே உயர்ந்தவர், தாழ்ந்தவர், நல்லவர், கெட்டவர் என்று அறிந்து கொள்ள முடிகிறது.

வாழ்க்கை என்பது பற்றிப் பேசுகின்றவரோ பலபேர்; எழுதுகின்றவர்களோ எண்ணற்றவர்; ஆனால், முறைப்படி வாழ்கின்றவர்களோ ஒருசிலரே யாவர். நல்ல வாழ்க்கையை—நல்ல செயல்களை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவே இயற்கையானது 'மரணம்' என்ற ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறது என்று எண்ணவேண்டியுளது. அழிவின் அச்சம் தோன்றாவிடில்—இல்லாவிடில் ஆணவங்கொண்டு வலியவன் எளியவனை வாட்டுவான்; அருள் நெறியை மறப்பான்; வாழ்வின் குறிக்கோளினையே மறந்து விடுவான். கேடுகள் பெருகி ஊரும், நாடும், உலகமும் அழியும். இவற்றையெல்லாம் கருதியே வாழும் வகை கூறிய வள்ளுவனார் 'இறப்பு' என்பதைச் சிறப்புடையது எனக் கூறுகின்றார். நேற்று இருந்த ஒருவன் இன்று இல்லை என்று சொல்லக் கூடிய பெருமையுடையது உலகு என்று பேசுகிறார்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

என்பது குறளாகும்,

தனி ஒரு மனிதன் உலகிடை வாழவும் முடியாது; வாழ்க்கை நடத்தவும் இயலாது. துணையோடுதான் வாழ வேண்டும். அந்தத் துணையும் அகம், புறம் ஆகிய இரு வாழ்க்கைக்கும் துணையாக இருக்க வேண்டும். உடலை வளர்ப்

பதற்கு உணவுப் பொருள்களும், மருந்துகளும் உறுதுணையாக இருப்பனபோல உயிரை—உளத்தை வளர்ப்பதற்கு அன்பு, பண்பு, பரநலம், தியாகம் முதலாய நற்குணங்கள் துணையாக உள்ளன. இத்தனை நற்பண்புகளையும் இயல்பாகப் பெற்றிருக்கின்ற பெண்ணே வாழ்க்கைத் துணையாக ஆவாள். நல்ல பெண்ணே வாழ்க்கைத் துணையாகக் கருதப்படுவாள் என்பதை அறிவுறுத்த "வாழ்க்கைத் துணை நலம்" என்ற அதிகாரத்தைத் திருவள்ளுவர் கூறியுள்ளார். பெண்ணோடு கூடி வாழ்ந்தால் அல்லவை தேய்ந்து அறமும் அன்பும் பெருகும். எல்லா உயிர்களிடத்திலும் இரக்கம் காட்டுகின்ற அருள் தன்மை உடையவர்களாக விளங்குவதே இல்வாழ்வின் பயனும்—மனித வாழ்வின் சிறப்பு மாகும்.

இல்வாழ்க்கையின் சிறப்பிற்குக் காரணம் பெண் என்பதுபோல அப்பெண்ணிற்குச் சிறப்பளிப்பது குழந்தையே யாகும். அப்பிள்ளையும் அறிவுடைய பிள்ளையாக அமைந்து விட்டால் தாய்க்குமட்டுமல்ல தாயகத்திற்கே நன்மை உண்டாகும். "சொன்ன சொல் மாறுமகப் பெற்றவரே துயர் துறந்தார்"—என்று கம்பரும், "மனைக்கு விளக்கம் மடவார் மடவார் தமக்குத் தகைசால் புதல்வர்"—என்று ஓர் பெரியாரும், "மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்-நன்கலன் நன் மக்கட் பேறு"-என்று வள்ளுவரும் கூறியிருப்பதிலிருந்து பிள்ளைகள் வாழ்வின் செம்மைக்கு உறுதுணையாக விளங்குகிறார்கள் என்பதும், உடலுக்கும் உயிருக்கும் இன்பமளிப்பவர்கள் என்பதும் இனிது விளங்கும். பெண்டு, பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்கும், பிறருக்கு உதவி செய்வதற்கும் இன்றியமையாதது பொருளேயாகும். "பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை" என்று குறளும், அறம், பொருள், இன்பமாகிய மூன்றனுள் "நடுவண தெய்த இருதலையும் எய்தும்"-என்று இலக்கணமும் பொருளற்றவர்கள் உலகிலே படும் தொல்லைகளும் பொருளின் சிறப்பினை உள்ளங்கை நெல்லிக்கனியென உணர்த்திக் கொண்டேயிருக்கின்றன. புறவாழ்விற்குரிய பெண்டு, பிள்ளை, பொருள் முதலியன சிறப்பாக அமையுமானல் அகவாழ்வும் தாமே சிறப்பாக அமைந்து வாழ்வின் முழுத்தன்மையையும் அடைய முடியும்.

வாழ்க்கையை வகுத்து வாழ்கின்ற மனிதன் அறிந்தோ, அறியாமலோ குற்றம் செய்துவிடுகின்றான். குற்றத்தை நீக்கிவிட வேண்டுமேயொழிய குற்றம் செய்தவனை வெறுத்தல் கூடாது. குற்றம் செய்தவர்களையெல்லாம் வெறுத்து ஒதுக்குவோமேயானல் ஒருவர்கூட நமக்கு உறுதுணையாக இருத்தல் முடியாது. ஆகவேதான் "குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை" என்ற அரிய பழமொழியும் ஏற்பட்டது. மேலும் ஆருயிர்கட்கெல்லாம் அன்புசெய்வதே வாழ்வின் பயனுமாகும்.

அன்பின் வழியது உயர்நிலை என்று கூறுகிறது குறள். எனவே பிறர் செய்த குற்றத்தைத் தூற்றுவதால் மாற்றம் ஏற்படாது; அன்பு வளராது; மாருகக் குற்றத்தையே செய்வதற்கு ஊக்கம் ஏற்பட்டுவிடும். குற்றம் செய்தான் என்று மட்டும் நினைக்காமல் குற்றம் ஏன் செய்தான்? அதற்குரிய சூழ்நிலை எது? என்பதை அறிந்து மனமாற்றத்தை உண்டுபண்ணுவதே அறிஞர்களின் கடமையாக இருக்கவேண்டும். துன்பம் ஒருவன் செய்தால் அவனுக்கு மீண்டும் துன்பமிழைத்தல் கூடாது. செய்த துன்பத்தைப் பொறுத்துக் கொண்டால் துன்பம் செய்தவனுக்குத் தான் செய்வது தவறு என்பதை உணர முடியும். துன்பம் செய்தவன் உணர்ந்து மனமாற்றம் அடைகின்ற முறையில் துன்பப்பட்டவன் நன்மை செய்ய வேண்டும். இத்தகை உளவியலறிஞராக வள்ளுவனர் விளங்குகிருர் என்பதை,

"இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"

என்ற குறளின் மூலம் நன்கு அறிந்துகொள்ளலாம். இதனையறியாது பிறர் செய்த குற்றத்தையே பேசித் தன் வாழ்வையும் குலைத்து வருகின்ற கொடுமையைக் காண்கின்ருேம். வாழ்வின் முடிந்த பயன் புகழடைதலே. உயிரைக் கொடுத்தாகிலும் புகழைப் பெறவேண்டும் என்ற புறநானூறும், தோன்றில் புகழொடு தோன்ற வேண்டும் என்று திருக்குறளும் கூறுகின்றன. பிறர் குற்றத்தை எடுத்துத் தூற்றினல் புகழ் கிடைக்குமா? இழிந்த நிலையைக் கூறினல் உயர்ந்து வாழ முடியுமா?

வாழ்க்கையின் பெரும் பயனுகிய புகழினை அடைய விரும்புபவன் மறவாமல் கடைப்பிடிக்கும் கொள்கை ஒன்று உண்டு. அதுவென்ன என்ருல்: 'பிறருடைய சிறப்புக்களையெல்லாம் பரப்பி, சிறுமைகளை—குற்றங்களையெல்லாம் மறந்து, யாரையும் இழிவாகக் கூறுகின்ற தன்மையை நீக்க வேண்டும்' என்பதை,

"பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்ப தொன்றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்"

என்ற பாடல் புகழடையும் வழியினை விளக்கிக் கூறுகின்றது.

வாழ்வைத் தொடர்ந்து கவலையும் பின் தொடர்ந்தே வருகின்றது. அரசர்க்கும் கவலை உண்டு; ஆண்டிக்கும் கவலை உண்டு. செல்வர்க்கும் கவலை உண்டு; செல்வமிலா ஏழைக்கும் கவலை உண்டு. ஏன்? சிற்சில சமயங்களில் காரணமில்லாமலேயே கவலை ஏற்படுவதுண்டு. இங்ஙனம் அனைத்து மாந்தரையும் அலைத்துக் குலைத்து வருத்தும் மனக்கவலையைத்

தனக்குவமை இல்லாதானின் தாளினைச் சேர்ந்தால் மாற்ற முடியும் என்கிறார் வள்ளுவர். ஆனால் இக்கருத்தினை எல்லோரும் ஏற்றுப் பொறுமையாக இருப்பர் என்று கூற முடியாது. பன்னூறாண்டுகட்கு முன்னர் வாழ்ந்த பாண்டிய நாட்டுப் பிசிராந்தையார் கவலையின்றி வாழ்வதற்குரிய சாதனைகளைக் கூறுகிறார் கேளுங்கள்! 'அருங்குணம் வாய்ந்த மனைவியும், அறிவு சான்ற பிள்ளைகளும், குறிப்பறிந்து வேலை செய்கின்ற வேலையாட்களும், நாட்டிலே உள்ள கேடுகளை நீக்கி, உணவு, உடை, உறையுள் ஆகியவற்றைக் கொடுத்துப் பாதுகாக்கின்ற அரசனும், ஆன்றவிந்தடங்கிய கொள்கையினை யுடைய சான்றோரும் ஒரு ஊரில், நாட்டில், உலகில் அமைந்திருப்பார்களேயானால் மக்கள் கவலையின்றி களிப்போடு வாழ்வர். வளம் பெருகும். கவலையால் தோன்றும் நரையினைக் காணமுடியாது என்று கூறுகிறார். வாழ்க்கையில் இருப்பவர்களும், வாழ விரும்புபவர்களும் படித்துணர வேண்டிய புறநானூற்றுப் பாடலைக் காண்போம்.

"யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்கா கியிரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான்கண்டனையர் என் இளயரும், வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கு மதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர்பலர் யான் வாழும் ஊரே". புறம் 191

அகவாழ்வு, புறவாழ்வு ஆகியவற்றை ஒழுங்குபடுத்தி, வாழ்க்கைக்குரிய துணைகளைத் தேர்ந்தெடுத்து, மாந்தர் செய்யும் குற்றங்களைப் பொறுத்துத் திருத்தி, கவலையிலா வாழ்விற்குரிய சாதனைகளை மேற்கொண்டு புகழமைந்த வாழ்வினை நடாத்துதலே மரணமிலாப் பெருவாழ்வாகும். இதனையே வள்ளுவப் பெருந்தகையாரும் "வாழ்வாங்கு வாழ்தல்" என்று குறிப்பிடுகின்றார். மண்ணுலகில் வாழும் மாந்தன் ஒழுங்கான—ஒழுக்கமான வாழ்வினை—பிறர் பழிக்காத வாழ்வினை மேற்கொண்டால் விண்ணுலகத் தெய்வமாகவே ஆகிவிடுவான் என்றும் உரைக்கிறது குறள்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்பது குறளாகும். வாழ்க்கையை வகுக்கும் நூல்—வாழ வைக்கும் நூல் திருக்குறளே. அந்நூலைப் பன்முறை படியுங்கள்! உணர்ந்து தெளிந்து இயன்றவரை வாழ்விலே கடைப் பிடியுங்கள்! வேறுபட்ட இனங்களும், மாறுபட்ட கொள்கைகளும் உலவுகின்ற உலகம் ஒன்றுபட்டு வாழ குறள்நெறி பரப்புவதே—பரவுவதேயாகும்.

# கலையுணர்ச்சியும் அறிவெழுச்சியும்

தி. நா. அறிவு ஒளி

திருவள்ளுவரோ, பிற பழங்காலப் புலவர்களோ, வேறு கலைஞர்களோ தாங்கள் தம் கலைப் படைப்புக்களை உருவாக்கும்போது, அப்படைப்புக்கள் பிற்காலத்தில் திறனாயவோ, ஆராயவோ படும் என்பதை அவர்கள் அறிய மாட்டார்கள். பொதுவாக எந்தக் கலைஞரும் இலக்கிய ஆசிரியரும் எழுத்தாளரும் தம் படைப்புக்களை மக்களுக்காகத் தான் உருவாக்குகிறார்கள். சுவைக்கவும், பயன்படுத்தவும் தான் அதை உலகுக்குவழங்குகிறார்கள். திறனாய்வாளன் இடையில் தன் திறமையைக் காட்டிப் பணிசெய்கிறான். திறனாய்வாளனுக்காகவோ, திறனாய்வுக்காகவோ எந்த நூலும், கலையாக்கமும் தோன்றுவதில்லை.

நூலின் படைப்பு இலக்கிய ஆசிரியனின் கலையுணர்வின் ஆற்றலினால் தோன்றுகிறது. அறிவெழுச்சியின் ஆர்வம் கலை முயற்சிக்குத் தூண்டு கோலாகிறது. அறிவு முனைப்பும் உணர்ச்சி நிறைவும் நூலின் தோற்றத்துக்கு அடிப்படை. இன்னும் சொல்வதானால், இலக்கிய ஆசிரியன் தன் உள்ளத்து இலக்கிய வெறியைத் தணித்துக் கொள்வதற்காகவே இலக்கியங்களைப் படைக்கிறான். படைப்புக்குப் பின்னரே—தான் வெறும் மாந்தனாக மாறியபின்பே—அவ்விலக்கியத்தைப் பிறருக்கு அளிக்கவேண்டும்; அவர்கள் அதைச் சுவைக்க வேண்டும்; பயன்பெற வேண்டும்; அதன்பின் பாராட்ட வேண்டும் எனவெல்லாம் கருதுகிறான்.

திறனாய்வாளன் நூலாராய்ச்சி செய்யும்போது அறிவைத் துணைக்கொண்டே ஆராய முற்படுகிறான். நூலாசிரியன் உணர்ச்சியை உயிராகவும் அறிவைத் துணைக்கருவியாகவும் கொண்டே நூலியற்றுகிறான். நூலோடு ஒன்றும்போதும், ஈடுபட்டுப் படிக்கும்போதும், படித்த பின்னும்தான் சுவைஞரும் திறனாய்வாளரும் உணர்ச்சி காட்டுகின்றனர். அப்போதும் அந்த உணர்ச்சியை 'ஓரளவு உணர்ச்சி' என்றுதான் கூறவேண்டும். நூலியற்றியகலைஞன் எவ்வளவு உணர்ச்சியைப் பெற்றிருந்தானோ அவ்வளவு உணர்ச்சியைக் கற்பவன் பெறுவது ஓரளவு கடினமே.

நோயினால் துன்பப்படுவன் எவ்வளவு உணர்வானோ அந்நோயை, அந்த அளவு இலக்கியக்கலைஞன் உணர்ச்சி மிக்கவனாக இருப்பான். அந்நோயாளியை அன்போடு

பேணும் உறவினர் கண்ணால் கண்டு உள்ளம் உருகிக் கசிவதால் தோன்றும் உணர்வு எவ்வளவோ; அவ்வளவோ நூலைக்கற்பவன் உணர்ச்சி நிலையுமாகும்.

இதற்குக் காரணம் என்ன?

புலவரின் அக உலக விரிவும் ஆழமும் பெருமையும் அளத்தற்கரியது. கலைஞர்களின் உள்ளுணர்வு நனிநுண்ணியது ஒண்மைவாய்ந்தது. தாம் படைப்புத் தொழிலில் ஈடுபடும்போது கலைஞர் தம் படைப்புப் பொருளாகவே மாறிவிடுகின்றனர் என்பது உண்மையே. அதனால்தான் உணர்ச்சிப் பிழம்பாக — உணர்வின் உருவமாகக் கலைஞர் ஆனபின்பே இலக்கியமோ, கலையோ பிறக்கிறது. அவ்வாறு உணர்ச்சிக் கருவில் ஊறிப்பிறப்பதால் தான் கலைப்படைப்பு மற்றவரின் உணர்ச்சிகளையும் அள்ளி ஈர்த்து அடிமையாக்கிக் கவர்கிறது. இதனால் தான் இலக்கியத்திற்கு இருக்கும் கவர்ச்சி இலக்கணத்துக்கு இல்லை. இதனால்தான் கணக்கு, அறிவியல், முதலிய அறிவுத்துறை நூல்களைவிட இலக்கியத்திற்கு மக்களிடம் செல்வாக்கு மிகுதியாக உள்ளது. ஆருயிர்க்காதலி, காதலனின் உணர்ச்சிக்கும் சுவையறிவுக்கும் விருந்தாகிறாள். அதனால் தான் காதலியைப் பிறயாரினும் காதலன் சிறப்புள்ளவளாகப் போற்றி வாழ்க்கைத் துணைவியாக ஏற்கிறான். அது போல உணர்ச்சி விருந்தாக நுண்கலைகளும் ஒண்மலையான இலக்கியங்களும் விளங்குவதால்தான் பிற துறைகளைவிட மக்கள் இவற்றுக்குச் சிறப்பிடமும் முதன்மையும் வழங்குகின்றனர்.

விழிப்புள்ள அறிவு மிக முயன்று தொழிற்பட்டால்தான் இலக்கணம், கணக்கு, ஆராய்ச்சி, அறிவியல், தொழிலியல் முதலிய பயன்கலைத் துறைகளில் பயில—ஈடுபட முடியும்.

தூங்குகின்ற உணர்ச்சியைக்கூட நுண்—ஒண் கலைகளின் மிக மெல்லிய கதிர்கூடத் தொட்டு விழிப்புறச் செய்து உள்ள மலர்ச்சியை உண்டாக்கிவிடும்.

எந்தக் கலையையும் உருவாக்குவது ஒரு பெருந்தவ முயற்சியோயாகும். தன்னையும் மறந்து தனிமை உலகில் துறவியாக மாறியே கலைஞரோ, புலவரோ தத்தம் படைப்புக்களை உருவாக்குகின்றனர். இப் புலமைத் தவத்தில் தங்களையே அழித்துக்கொள்ள நேர்ந்தாலும் அதற்காக கலைஞர்கள் கவலைப்படுவதில்லை; மாறாக ஆராப் பேரின்ப மெய்துறார்கள்!

இதனால் திறனாய்வாளன் 'சுவைக்கும் ஆற்றல்' மிக்கவனாக ஆகவேண்டும். சுவையுணர்திறம் குறைந்தவன் சீரிய திறனாய்வாளனாக முடியாது. சுவையுணர்ச்சி மட்டும் மிகுந்திருப்ப

வனும் உண்மைத் திறனாய்வுவாளனாக முடியாது. அறிவு முனைப்பும் திறனாய்வாளனுக்கு நனிவேண்டும். திறனாய்வாளன் ஏறிச்செல்லும் ஊர்தி சுவையுணர்ச்சி என்றால், அதற்கு வழிகாட்டும் விளக்கும்; அவ்வூர்தியியக்கும் ஆற்றலும் அறிவெழுச்சியே என்பதை மறக்கக்கூடாது.

நூலாசிரியன் உணர்வின் மிகுதியால் பிழைபடும் இடங்கள் இருக்கக்கூடும். அங்கு அறிவு வெளிச்சத்தைத் துணைக்கொண்டு ஆராயும் திறனாய்வாளன் அப்பிழைகளைச் செப்பனிடும் பொறுப்புள்ள பணியைத் துணிவோடு செய்ய வேண்டும். இந்தக் கடமையிலிருந்து ஆய்வாளன் அஞ்சியோ தயங்கியோ ஒதுங்கினால் அவன் திறனாய்வாளன் ஆக மாட்டான்!

உணர்ச்சிப் பசி மக்களுக்கு இயற்கையானது. எத்தகைய அறிஞரும், வல்லமை வாய்ந்தோரும் உணர்வெழுச்சியின் அடிமைகளே என்பதை மறக்கக்கூடாது. உணர்ச்சிகளில் சில, சில பேரைக் கவராமலிருக்கும்; ஆயின் வேறு வகை உணர்ச்சிகள் அத்தகையோரை எளிதில் கவரலாம்.

இக்கருத்து பொதுமக்களுக்கு மட்டுமின்றி நூலாசிரியர்களுக்கும் உரிய இலக்கணமும் ஆகும். தாம் ஈடுபாடு கொள்ளும் உணர்ச்சிகளையே நூலில் அமைக்கப் புலவர் பெரிதும் விரும்புவர். ஆயின் சிலபோது தாம் விழையாதவற்றைப் பற்றியும் புலவர்கள் நூலில் விரித்தெழுத நேரும். அவ்வுண்மையை அறியப் புலவரின் அக—புறவாழ்க்கையின் உண்மை வரலாறு கிடைக்கவேண்டும். சில ஆசிரியர்கள் சிலகாலம் ஒருசில உணர்ச்சிகளுக்கு அடிமையாக இருந்து, அதற்கியையத் தம் படைப்புக்களை உருவாக்கி இருக்கலாம். பின்னர் உணர்வுச் சுவை மாறிவிட, வேறுவகை உணர்ச்சிகளுக்கு அடிமையாகித் தம் படைப்புக்களை ஆக்கியிருக்கக் கூடும். இவ்வுண்மையை ஒரேவழிதான் நூல்களின் வாயிலாக அறிய முடியும், இங்கும் நூலாசிரியரின் (கலைஞரின்) வாழ்க்கை வரலாறே நமக்கு உண்மையைத் தெரிவிக்கக் கூடியதாகும்.

சில கலைஞரின் வாழ்க்கை பற்றிய செய்தியே கிட்டாதுபோய் விடுகிறது. சில கலைஞரின் உண்மையான வாழ்க்கை வரலாறு' எழுதப் பெருமல் போய் விடுகிறது; இவ்விரு நிலைமையும் திறனாய்வுக்கு ஒருசிறிதும் பயன்படாது. இத்தகு நிலையில் கலைஞரின் படைப்பை வைத்தே அன்னார் வாழ்க்கையை உய்த்தறிய, ஆராய முனைய வேண்டும். இம்முயற்சி பெரும்பாலும் உண்மையைத் தெளிவிக்கக் கூடும். (சிலபோது சில கலைஞர்களைட்

பொருத்தவரை சற்றே பிழைபடவும் நேரலாம்.) வாழ்க்கையி லிருந்தே விளைவு தோன்றுகிறது. எனவே வாழ்வுக்கும் விளைவுக்கும் நெருங்கிய உறவும் பிணைப்பும் உண்டு.

அடைவுதான் அறிவுக்கும் அடிப்படை. அடைவு என்ற தாய் தான் கற்பனை என்ற குழந்தையைப் பெற்றளிக்கிருள். ஐம்புல உணர்வுக்கு 'இன்றியமையா வாழ்க்கைத்துய்ப்பு' இன்றெனில் கற்பனையே இல்லை. இதை யாராலும் மறுக்க முடியாது. ஏனெனில் இது ஒப்புக் கொள்ளப்பட்ட மாருத உண்மை. ஏதாவது ஒருவகை அடைவின் விளைவாகவே கற்பனை தோன்றி வளர்கிறது. இவ்வுண்மையைப் படைப்புக் கலைஞர்களாகவோ, படைப் பிலக்கியப் புலவர்களாகவோ இருந்தால்தான் நன்கு அறிய முடியும். இவ்வுண்மையை வெறும் திறனாய்வாளரோ சுவைஞரோ, போலி இலக்கிய எழுத்தாளரோ உணரவே முடியாது. நெருப்பு போன்றது வாழ்வடைவு என்றால் அந்நெருப்பினின்று வெளிப்படும் வெப்பம் போன்றது கற்பனை எனலாம்.

கற்பனை, உணர்ச்சிவழிப்பட்ட கற்பனையென்றும், அறிவு வழிப்பட்ட கற்பனை என்றும் இருகூருக அமையும். பெரும்பாலும் இலக்கியங்களிலும், கலைகளிலும் உணர்ச்சி வழிபட்ட கற்பனையே அமையும். சிறுபான்மை அறிவு வழிக் கற்பனையும் இடம் பெறும். திருக்குறள் இவ்விரு வகைக் கற்பனைகளும் ஒன்றுகலந்துருவான நல்லிலக்கியம். இவ்வாறு இருவேறு துறைகளை இணைக்கும் படைப்பு ஒருவகைப் புதுமை முயற்சியே. இத்தகு முயற்சிகள் காலத்தை வெல்லும் இயல்பினை உடையன. அறிவு வழியே மட்டும் இயங்குவதும் தீது. உணர்ச்சி வழி மட்டும் ஒழுகுவதும் தீது. இருவழியிலும் ஒரு நிலையோடியங்குவதே நலம். மக்களுக்கு மட்டுமின்றி கலைஞர்கள், புலவர்களுக்கும் இவ்விலக்கணம் பொருந்தும். திறனாய்வாளர்களும் இந்நுட்பம் உணர்ந்து தம்மை அதற் குரிய தகுதியினராக அமைத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு நடுநிலை அறிவு-உணர்ச்சிக் கலைஞர்களாகச் சங்க கால அறிஞர்கள் விளங்கினர். ஆகவேதான் அவர்கள் அரசர்களின் படைகளைக் குறிக்கும்போது குறிப்பிட்ட எண்ணிக்கையில் குறித்துப்பாடவில்லை. (சான்ருக நூருயிரம் காலாட்கள், பத்தாயிரம் யானைகள், இருபதாயிரம் குதிரைகள், ஐந்தாயிரம் தேர்கள் என்றெல்லாம் கணக்கிட்டுக் கூற வில்லை.) இது போலவே ஒவ்வொரு துறையிலும் பயனற்ற முயற்சி என்று அவர்கள் கருதியதைத் தவிர்த்திருக்கின்றனர். சில துறைகளில் அறிவைப் புறக்கணித்து, உணர்ச்சியை மட்டுமே கூட அக்கால இலக்கியமேதைகள் போற்றிருயிப் பதை அறிகிறோம். 'ஒருவரை நீடூழி வாழ்க!' என வாழ்த்தும்

போது, 'மழைத் துளிகளிலும் பல ஆண்டுகள் வாழ்க!' என்றும், 'பஃறுளியாற்று மணலினும் பல்லாண்டு வாழ்க!' என்றும், 'வான் மீன்களினும் நெடுநாள் வாழ்க!' என்றும் குறிப்பிடுவது இத்தகையதாகும். இவ்வாழ்த்துக்களில் அறிவின் கூறும் உள்ளது போலவே தோன்றும். ஆயினும் உணர்வின் ஆட்சியே இதற்குச் சிறப்புக் காரணமாகும்.

படைப்புக் கலைஞரின் உள்ளம் ஈடுபட்டுச் சுவைத்த வற்றை நாம் உணர்வது அன்னார் வாழ்க்கை இயங்கிய வழியை உணர்வதற்குத் துணையாகும். அந்த ஆராய்ச்சி வளரவேண்டு மானால், புலவர்தம் உள்ளவியல்பைப் பெற (ஓரளவாவது) நாம் திறமையும் தகுதியும் உடையவராதல் வேண்டும். இது அரும் பெரும் முயற்சி என்பதில் ஐயமே இல்லை. பெரிய எண்ணிப் பெரிய செய்து அரியது விளைப்பதல்லவோ மக்கட் பிறப்பின் நோக்கம்! எனவே யாவரும் இத்துறையில் முயல்வது நலம் பயக்கும்.

இன்றைய வாழ்க்கைக்கு மட்டும் இரையாகத் துடிக்கிறது மாந்தர் கூட்டம்; நாளைய வாழ்வுக்கும் உதவுவது மக்களின் கடமை என்பதை மறந்து விடுகிறது இக்கூட்டம். அறிவு வெறியின் துடிப்பு இதற்குக் காரணமாகலாம். ஆகவே உணர்ச்சியோடு அறிவை இணைத்துச் செயற்படுத்தினால் வெறி வாழ்க்கை, நெறிவாழ்க்கையாகும். முறையோடு கூடிய உலகம் உருவாகும்.

ஆர்வ எழுச்சியைத் தூண்டவேண்டிய கலை—இலக்கியங் களின் தலையாய கடமை அதை மறந்து—அக்கொள்கைக்கு மாறுபட்டு—உருவாகும் கலையோ, இலக்கியமோ உலக நலனுக்கு ஊறுவிளைவிப்பதாகும். அத்தகு படைப்புக்களைச் செய்வோர் வளரும் குழந்தைக்கு நஞ்சை ஊட்டும் வஞ்சகரே யாவர்!

குறிப்பாக உணர்ச்சியைத் துறந்த அறிவோ, அறிவைக் கடந்த உணர்ச்சியோ நன்மை பயப்பதில்லை; தீமையே பயக் கிறது என்பதை உணர்ந்து படைக்கவும், சுவைக்கவும் கலைஞரும் மக்களும் முன்வரல் வேண்டும்.

---

இன்னமுதாய் எழில் ஒன்றியே — புகழ்
தென்னகத் தேவளர் வென்றியே — பழங்
கன்னடம் மாமலை யாளமாம் — இசை
துன்னுதெலுங் கென யாவையும் — வளர்
கன்னிப் பருவத்தில் ஈன்றதாய் — தமிழ்ச்
சென்னியும் சேரர் செழியரும் — முன்னர்
அன்னையெனப் புகழ்ந் தேத்தவே — வரும்
அன்னையிணையடி வாழ்த்துவோம். (ச. பர.)

சென்ற இதழின் தொடர்ச்சி :

# புகாரில் புகுந்த புயல்

K. S. மகாதேவன், M. A., B. Sc.,

வாழ்க்கையின் அகத்தையும் புறத்தையும் குழப்பிக் கொண்டு திரிந்த கோவலனுக்கு மாதவி அனுப்பிய காதல் மணம் கமழும் கடிதமும் கலையுலகத்து நடிப்பையே நினைவூட்டுகின்றது! காதல் உள்ளம் வடிக்கும் கண்ணீரைக் கண்டும்.

"ஆடல் மகளே ஆதலின் ஆயிழை
பாடு பெற்றன அப்பைந் தொடி தனக்கு"

(வேனிற் : 109—110)

என்று கூறும் கோவலன்பால் நமக்கு இரக்கமே தோன்றுகிறது. கலையின் மீது கரை கடந்த ஆர்வம் கொண்ட கோவலனால் கூடக் கலையைச் சரியாக மதிப்பிட முடியாமல் போனதற்குப் பூம்புகாரில் புகுந்து வீசிய புயலைத்தான் காரணம் கூறவேண்டும். கலையின் வழி பிறழும் மாதவியின் கயல்விழிகள் தன்னொருவனுக்கே காதல் மொழி பேசுகின்றன என்று முதலில் கோவலன் எண்ணினான். ஆனால், அதே விழிகள் பின்னர்க் காதலால் கசிந்து கண்ணீர்த் துளிகளை உதிர்க்கும்போது அவை கலை என்ற மாலையிலிருந்து உதிரும் உணர்ச்சியற்ற வெறும் முத்துக்கள் என்று வெறுத்து விலகுகிறான். இந்த அவல நிலைக்குக் காரணம் பொதியில் வகுத்த பொருள் இலக்கணம் பூம்புகாரில் சிதைந்து போனதேயாகும்!

## இளங்கோ புகட்டும் அறிவுரை.

கலை காதல் குழப்பம் இன்றும் நாட்டில் இருந்துகொண்டுதான் இருக்கின்றது. கலையின் நுட்பம் பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வமில்லாத மக்கள் கலையுலக மாந்தரின் அகவாழ்வு பற்றி அறிந்து கொள்வதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர்! இவர்கள் உளநலிவைப் பயன்படுத்திக் கொண்டு பல ஏடுகளும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றன! இவர்கட்கு நல்லறிவு கொளுத்துதற்காகவே அடிகளார் அரங்கேற்று காதையை அமைத்துத் தந்திருக்கின்றார் என்றால் அது மிகையாகாது. கலையரங்கேறும் மாதவியைத் 'தாது அவிழ் புரி குழல் மாதவி' 'மாமலர் நெடுங்கண் மாதவி' என்பன போன்ற எளிய இனிய சிறு சிறு தொடர்களால் அறிமுகப்படுத்தி விட்டுக் காதை முழுவதையும் கலை நுட்பத்திற்காகவே செல விட்டுச் செல்கின்றார். இளங்கோவின் நெறி விடுத்துப் பின்னால் வந்த புலவர் பலர் 'அடி முடி' வருணனைகளில் ஈடுபட்டது தமிழ் நாட்டின் தவக்குறையேயாகும்!

இளங்கோவடிகள் கலையைப்பற்றிக் கொண்டுள்ள கருத்து சிலம்பில் நன்கு தெரிகின்றது. கலை என்பது கண் காட்சிக்கு என்று வைக்கப்பட்டிருக்கும் வண்ணம் உலராத பதுமை! அதனைத் தொலைவில் நின்றபடிதான் கண்டு சுவைக்க வேண்டும்; அருகில் நெருங்கித் தொட்டாலோ, கையில் ஒட்டிக்கொள்வதுடன் பதுமையின் அழகும் கலைந்து விடும்! பொதியில் வகுத்திருந்த எச்சரிக்கை எல்லையையும் மீறிக் கலையுருவத்தைத் தொட்டுத் தழுவிய கோவலனது கைகளிலே கண்டோர் நகைக்கும் வகையில் கறைபடிந்தது! அதனைச் சுட்டிக் காட்டித் திருத்துவதற்கு இந்திரனுக்கு விழா வெடுத்த புகார் நகரிலே சான்றோர்கள் இல்லாது போய் விட்டனர். கையில் படிந்து விட்ட கறையினைப் பொருள் என்ற நீர் தேடி எளிதில் கழுவிப் போக்கிவிடலாம் எனக் கோவலன் நினைத்தான். ஆனால், பொருட்குளத்தின் படிக் கட்டுகளிலே முன்பின் நடமாடியறியாத அவனை, அந்தோ, பொற்கொல்லன் ஒருவன் பாசியாக வந்து வழுக்கி விழச் செய் தான். கடமை உலகம்அழிந்தது; கலை உலகமும் கலைந்தது!

புயலின் விளைவு.

பூம்புகாரில் புகுந்து வீசிய இப்புயலால் கண்ணகி போன்று வாழ் விழந்தவர் பலர்; மாதவி போன்று பொலி விழந்த வரும் பலர். இவ்வுண்மையினைக்

"கையறு நெஞ்சத்துக் கண்ணகி யன்றியும்
காதலர்ப் பிரிந்த மாதர் நோதக
ஊதுலைக் குருகின் உயிர்த்தனர் ஒடுங்கி"

(அந்திமாலை : 57—60)

என்ற குறிப்பாலும் உணரலாம். மேலும் பூம்புகாரின் நிலை எந்த அளவிற்கு இழிந்துவிட்டது என்பதற்குக் கோசிக மாணி போன்ற 'தீத்திறம்' புரிந்தோர்களும் மாதவி போன்ற கணிகையர் தந்த ஓலையைத் தூக்கிக் கொண்டு ஊர் ஊராக நடந்து கோவலன் போன்ற பெருங்குடி நம்பியரைத் தேடிச் செல்லும் இடைப் போவாராக மாறிவிட்ட செய்தியே போது மானதாகும்! இந்த நிலையில் பூம்புகாரினைப் 'பொதுவறு சிறப்பின் புகார்' என்று யாரேனும் போற்ற முடியுமா? தனக்குரிய பண்பாட்டை இழந்து விட்ட பூம்புகார் உண்மையில் செத்துவிட்டது! இழிந்த வகையில் சாவைத் தேடிக் கொண்ட புகார் நகரின் முகத்தை எதிர் காலத்தில் யாரும் காணக் கூடாது என்ற நல்ல எண்ணம் மணிமேகலை காப்பியம் பாடிய சாத்தனாருக்கு எழுந்தது போலும்! மணிமேகலைக் கதையை முடித்ததோடு நீலக்கடலின் நெடுந் திரையினை இழுத்துப் பூம்புகாரின் முகத்தையும் இறுதியாக மூடிவிட்டார்!

சென்ற இதழின் தொடர்ச்சி:

# அறிவன் கோயில்

வித்துவான் சி. கோவிந்தராசனார்,

தமிழ் விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

**சிற்றன்னல் வாயில் உணர்த்தும் பிறகலைகள் : இசையும் கூத்தும்**

சிற்றண்ணல் வாயில் குகைக் கோயிலிலுள்ள ஓவியம் சிற்பம் இவைகளைக் கொண்டு கி. பி. 7-8-ஆம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் இசையும் கூத்தும் சிறந்திருந்தனவென்பது தெளிவாம்.

நாடகக் கணிகையரை அடிகள்மார் என்று அழைப்பது பண்டைய வழக்கம். அவர்களால் ஆடப்பட்ட நடனத் தோற்றங்களில் இரண்டினையே கலைஞன் குகைக் கோயிலின் தூண்களில் வரைந்துள்ளான். நடனத்தை இயக்குவது இசையும் பாட்டுமாம். ஓவியத்திலுள்ள கணிகையர்பால் அமைந்துள்ள மெய்ப்பாடுகளைக்கொண்டே அதற்கேற்ப இசையும் பாட்டும் அமைந்துள்ள உண்மை, நிறத்தைக் கொண்டு பழத்தையறிவதைப் போல் நன்கு புலனாகின்றது.

மற்றும், கி. பி. ஏழாம் நூற்றாண்டளவில் திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் வாழ்ந்தவராவர். அவர்களால் பாடப்பெற்ற பதிகங்கள் யாவும் பண்ணும் திறனும் கொண்டவை. இசைப் புலவராகத் திகழ்ந்த சம்பந்தர்

---

## அமைதி

புயலனச் சுழன்று பூம்புகாரை அலைக்கழித்த உருப்பசிப் பரம்பரை உருத் தெரியாமல் தேய்ந்தது; ஆம்! இமயக் கணிகை உருப்பசியின் வழிவந்த தன் மகள் என்று மணிமேகலையைச் சொல்வதற்கும் மாதவி நாணுகிறாள்! பொதியின் வழிவந்த கண்ணகியின் வழியினளாகத் தன் மகளைக் காண விரும்பும் அவள்

> காவலன் பேரூர் கனையெரி மூட்டிய
> மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை

(மணி : ஊரலர் : 54—55)

என்று கூறித் தன் பரம்பரைக்கு இருந்த இமயத் தொடர்பைத் தன்னோடு முறித்துக் கொள்கின்றாள். **உருப்பசி பரம்பரை மாதவியோடு முடிந்துவிட்டது!** புயலினின்று விடுபட்டுக் கடலடி சேர்ந்த பூம்புகார் எல்லையற்ற உறக்கத்திலே ஆழ்ந்து அமைதி காணத் தொடங்கியது!

பாடிய பாக்களை யாழில் அமைத்துக் காட்டியவர் திருநீல கண்ட யாழ்பாணராவர். யாழில் வல்ல அப்பாணரும் இசைக்க வொண்ணு 'யாழ்முறி' என்னும் பண்ணமைத்து ஞான சம்பந்தர் அன்று பாடினரெனின் அக்காலத்தில் தமிழ் இசை எத்துணை நுட்பமாகச் சிறந்திருந்ததென்பது போதரும்.

இவ்வாருகத் தமிழிசை சிறந்திருந்த காலத்திற்ருன் சிற்றண்ணல் வாயில் ஓவியக் கணிகையர் உருவாயினர். எனவே, அக்காலத் தமிழகம் நடனத்திலும் இசையிலும் நனி சிறந்திருந்தது என்பதற்கு இஃதொரு எடுத்துக்காட்டாகும். மற்றும், இக்கலைகளைக் கலைத்துறையில் மிக்க சமணர் வளர்த்துள்ளமையும் தெளிவாம்.

அழகுக் கலை :

பண்டைய மக்களின் நாகரிகத்தை விளக்குவன அவர்கள் விட்டுச் சென்ற கலைச் சின்னங்களும், பொருள்களுமேயாம். சிந்து வெளியில் அகழ்ந்தெடுத்த பொருள்களைக்கொண்டு திராவிடரின் நாகரிகத்தைக் கண்டுள்ளனர். சிற்றண்ணல் வாயிலிலுள்ள ஓவியத்தைக் கொண்டே அக்காலத் தமிழக மக்களின் நாகரிகத்தை ஒருவாறு கூறலாகும்.

குகைக் கோயிலில் உள்ள ஓவியங்களில் மனித உருவம் உடையன எட்டாகும். இவ்வோவிய மக்களின் தோற்றமும், அவ்வவர் அணிந்துள்ள ஆடை முறையும், அணிகலன்களின் வேறுபாடும், மகளிரின் தலைமுடியும் ஒப்பனையும் அக்கால மக்களின் நாகரிகத்தினை எடுத்துக் காட்டுவனவாகும்.

மகளிரின் ஓவியங்களில் காணப்படும் அணிகலன்களாகிய பதக்கம், கண்டநாண், பட்டைக்காறை (கழுத்தணி). அரதன வளையல், அரதனக் கடகம், கைக்காறை, பட்டிகை, மோதிரம், வடுகவாளி (காதணி), முத்தின் சூடகம் (கழுத்தணி), கொட்பு ஆகியவைகளைக் கொண்டும், அரசவோவியத்தில் திகழும் திருமுடி, வாகுவலையம், பட்டிகை, திரிசரம் (கழுத்தணி), திரள்மணிவடம் இவைகளைக் கொண்டும், சமணத் தொண்டர்கள் அணிந்துள்ள தடித்த அரைஞாண், கோவணம், வகிடுடன் விளங்கும் முடி, வடிந்து கிடக்கும் காது (தொளைக் காது) இவைகளைக் கொண்டும், அவ்வவர் அணிந்துள்ள ஆடைமுறையினைக் கொண்டும், அக்காலச் செல்வர், அரசர், மகளிர், சமணச் சாரணர் ஆகியோரின் நாகரிகத்தினை உள்ளவாறு அறிந்து கொள்ளலாம். அத்துடன் வெண்சுதைமீது கண்கவர் ஓவியமெழுதி இல்லங்களைப் புனைந்தழகு செய்து மக்கள் வாழ்ந்த மேன்மையும் புலனுகும்.

**அடிவாரச் சின்னங்கள் : சிதைந்த சிவன் கோயில்**

மலையைச் சுற்றிலும் நெருங்கியுள்ள குறுகிய நிலப்பரப்பே அடிவாரம் எனப்படும். கிழக்குப் புறத்தில் பாறைகளும் புதர்களும் மிகுந்துள்ளனவேயன்றி வேறெதுவும் இல்லை. மேற்குப் புறத்தில் மேடான பாறைப்பகுதிகளிலும் அடிவாரத்திலும், 'சிதைந்த வடிவில் பழைய சின்னங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் குகைக் கோயிலுக்குச் செல்லும் சாலையின் வலப் புறமான அடிவாரப் பகுதியில், இருபதடி உயர்ந்துள்ள தளத்தில், மலையைச் சார்ந்தபாங்கில் பழமையான சிவன் கோயிலொன்று பழுதடைந்து காணப்படுகின்றது. கோயிலின் முகமண்டபப் பகுதி சிதைந்து சுவரளவில் இன்றும் நிற்கின்றது. தொடர்ந்துள்ள கருவறையின் விமானப் பகுதி கும்பத்தோடு குறுகி நிற்கும் பிற்கால



சிதைந்த சிவன் கோயில்

வேலைப்பாட்டுடன் மூடப்பட்டுள்ளதால், சென்ற நூற்றுண்டில் அத்திருப்பணி நிகழ்ந்துள்ளதாகத் தெரிகின்றது. அழகிய சிவலிங்கத்தோடு விளங்கும் இக்கருவறையின் முற்பகுதியில் நிலவறை இருப்பதற்குரிய சூழ்நிலை காணப்படுகின்றது. இவ்விறைவன் கோயிலைச் சார்ந்து வலப்புறமாக இறைவியின் திருக்கோயிலும் சிறிய அளவில் தனித்து அமைக்கப் பட்டுள்ளது. இங்கு உமையம்மையின் திருமேனி நின்ற கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விரு கோயில் களையும் வலம் வருவோமாயின், கோயிலைச் சார்ந்து செங்குத்தாக எழுந்து நிற்கும் மலையின் வானளாவிய நெடிய தோற்றம் மாட்சியோடு விளங்கும். இங்கு, தெற்கு நோக்கிய பாங்கில் பழமையான பைரவர் திருமேனியொன்று உயர்ந்து நிற்பதைக்

காணலாகும். இச் சிலையின் சிற்ப அமைப்பு மிகவும் நுட்பமானதாகும். இன்று தனித்து வெட்ட வெளியில் நிற்கும் பைரவர், ஒரு காலத்தில் இச் சிவன் கோயில் திருச்சுற்றுத் திருமாளிகையில் அமைந்திருத்தல் வேண்டும். தனித்து நிற்கும் பைரவரைத் தழுவிக் கொண்டெழுந்த காட்டுச் செடிகள், பல வண்ண மலர்களால் அவரை நிறைத்து, இதழ்களைப் பாதமளவும் நெகிழவிட்டு நிற்கும் காட்சியும், அருகே செங்குத்தாக எழும் மலையின் மாட்சியும் உள்ளத்திற்கு உவகையூட்டுகின்றன.



பைரவர் திருமேனி

## பைரவர் வணக்கம்

பல்லவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே சமண சமயத்தின் புதிய வேகத்தைத் தணிக்கச் சைவமும் வைணவமும் தலைப்பட்டன. அதன் காரணமாகவே ஆழ்வார்களும் அடியார்களும் ஆங்காங்குத் தோன்றலாயினர். அத்துடன் காபாலிகர், காளாமுகர், பாசுபதர் என்னும் இந்து சமயப் பூசாரிகள் விந்தியமலைப் பகுதிகளினின்றும் தமிழ் நாட்டிற் புகுந்து பரவி வந்தனர். அவர்களுள் காபாலிகர் பைரவர் வணக்கத்தையும் மேற்கொண்டிருந்தனர். நரபலி உயிர்ப்பலி இடுதலே அவர்கள் பைரவர்க்கு இடும் சிறந்த காணிக்கையாகும். அவர்கள் பெண்களைத் தெய்வமாக மதித்தனர். எனவே, சக்தி வழிபாடும் அவர்களிடம் சிறந்து வளர்ந்தது. அதற்குச் சின்னமாக நெற்றியில் குங்குமக் குழம்பை அப்பி இருப்பர். கையிற் சூலமும், நெற்றியில் குங்குமக் குழம்பும், உடல் முழுவதும் திருநீறும் அணிந்தவராய் நிலவிய காபாலிகருடைய தோற்றம், கண்டவரஞ்சத்தக்கதாக இருக்கும்.

இவ்வாறு, பெருகிய சமயப் பூசாரிகளின் கூட்டம் பிற்காலச் சோழ மன்னர்களின் ஆதரவிலும் வளர்ந்து வந்தது சிற்றண்ணல் வாயில் மலையடிவாரத்திலுள்ள பைரவர் சிலை, பிற்காலச் சோழவர் வளர்த்த சிற்ப இலச்சினையுடன் காணப்

படுகின்றது. எனவே, நாட்டில் பைரவர் வணக்கம் பெருகி வந்த பத்தாம் நூற்றாண்டுமுதல் பன்னிரண்டாம் நூற்றாண்டளவிற்குள் பைரவர் சிலையும், சிவன் கோயிலும் இங்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

## சிறு சுனை

பழுதடைந்து நிற்கும் சிவன் கோட்டத்திற்குத் தெற்கே, சுரடிக் குகைக்கு நேரான அடிவாரத்தின் நிலப்பகுதி பெரும் பாலும் நான்கடி உயரமாகப் படர்ந்துள்ள பாறை, தளமாகக் காணப்படுகின்றது. பாறையின் நடுவே நீர் நிறைந்த பிளவொன்றுளது. இதுவே சிறுசுனை. இதனைக் 'கணபதி சுனை' என்றும் அழைப்பர். இச்சுனை உருவிற் சிறியதாயினும் தொட்டனைத் தூறும் மணற்கேணிபோல் வற்றாது நன்னீரைச் சுரந்தருளும் மேன்மையுடையது.

## சிற்றேரிடை

சிறு சுனைக்கும் மலைமீது ஏறுவதற்குரிய தென்சரிவுப் பாதைக்கும் இடைப்பட்ட பள்ளத்தாக்கு ஓடையாகவே அமைந்துள்ளது. மாரிக்காலங்களில் இவ்வோடை நீர் நிறைந்து ஆம்பற் கொடிகளுடன் அழகுடன் காணப்படுகின்றது.

"முன்னொருநாள் இவ்வோடை தாமரைக் கொடிகளாலும் மலர்களாலும் மூடிக்கிடந்தது. நாள்தோறும் சமணத் தொண்டர்கள் மலர்களை வழிபாட்டிற்குப் பறித்தனர். அன்னமும் வெண்குருகும் அதிலமர்ந்திருந்தன. அஞ்சாது யானைகள் ஓடையில் இறங்கி நீராட, பகடும் பசுவும் பூக்களைப் பறித்துண்டன."

இவ்வாறு கற்பனையிற் காணுதற்குரிய காட்சியே, குகைக் கோயிலை அழகுசெய்த ஓவியக் கலைஞருக்கு அன்று முகமண்டப விதானத்தில் தாமரைக் குளவோவியம் எழுத உதவியது போலும்!

## ஐயனார் சிலை

சிற்றேருடையின் கரையில் ஐயனார் சதுக்கமும் எல்லைத் தெய்வங்களின் சிறு கோயில்களும் அமைந்துள்ளன. மலையின் மேற்குப் புறத்தில் பிடாரி கோயிலும், தென்மேற்கே உள்ள திடரில் பழமையானதாகக் கருதப்படும் ஐயனார் சிலையும் இருக்கின்றன. இத்தெய்வச் சிலை இன்று கோயிலின்றி மண்மேட்டிலிருந்து காட்சியளிக்கிறது. இத்தெய்வம் சமணருக்குரிய தெய்வங்களுள் சிறந்ததொன்றென்பதை ஸ்ரீபுராணம் நன்கு இயம்புகிறது. இவ்வாறான தெய்வ சதுக்கங்களால் நிறைந்த அடிவாரத்தின் சூழ்நிலையை ஆராயின்,

# எங்கள் ஐயா

K. சோமசுந்தரம், B. A. B. L, தஞ்சை.



கணபதி ஐயா

‘ஐயா’ எனப் பரிந்தோம்பி, இது காறும் அழைக்கப்படுபவரின் அருள் பழுத்த திருமுகமும், அன்பருளத் திடர்தீர்க்கும் ஆர்வ நோக்கும், கருணை வாழ்வின் உருவும் கரந்து போயினமைக்கு ‘என்றினியாங் காண்பேமென’ ஏங்கி நினைந்து, பொங்குதுயர் கண்ணீரில் நினைத்துக் காண, மனம், மாரிநாட்குயில் போலப் புழுங்கிக் கலக்கமுறும்.

விருந்து பேணும் திருப்திய வேளாண் குடிக்கண், அழகு தந்த அருளாகத் தோன்றியவர், கணபதி ஐயா அவர்கள். பொருத்தமுறு சூழலிலே, வருத்தமின்றி அருத்தியோடு இளமையில் கசடறக் கல்வி கற்றவர். சிறப்

---

ஒரு காலத்தில் இப்பகுதியை அடுத்து சிற்றூரொன்று இருந்திருக்க வேண்டுமென்பதும், அக்காலத்தில் இத்தெய்வங்கள் சிறப்புடன் கோயில் கொண்டிருந்தன வென்பதும் தெளிவாகும்.

### காணற்கரிய காட்சிகள்

கால வெள்ளத்தால் நிலையழிந்து புதையுண்டனவும், சமயவேகச் சூறாவளியால் அழிந்தனவும் போக, மலையிலும் சூழலிலும் எஞ்சி நின்று இன்று காட்சி தரும் சின்னங்களையும் வரலாறு கொண்ட பகுதிகளையும் இதுவரையில் கூறினோம். மலையில் மனிதன் சென்று காண்பதற்கு இயன்ற குகைகளே யன்றி, மற்றும் சில குகைகள் ஆங்காங்குக் காணப்படுகின்றன. அவற்றினுள் எவ்வகையிலும் செல்லுதற்கு இயலாது, எடுத்துக்காட்டாகக் கரடிக்குகையின் மேல் வாயிலை ஒட்டியே தெற்குப் புறத்தில் ஆழ்ந்து செல்லும் குகைவாயிலை நேரிற் காணின் இவ்வுண்மையை அறியலாகும். சில குகைகளைத் திருடர்கள் இருப்பிட மாகக் கொண்டிருந்ததால், அவற்றைச் சென்ற நூற்றாண்டில் புதுக்கோட்டை அரசாங்கத்தார் பாறைகளால் அடைத்து விட்டார்களாம். மற்றும் மலையைச் சூழ்ந்துள்ள பகுதிகளில் குறிப்பிட்ட இடங்களை அகழ்ந்து ஆராய்ச்சி செய்தால் சரித்திர வளர்ச்சிக்கு ஏற்ற சின்னங்கள் கிடைக்க ஏதுவிருக்கிறது.

(தொடரும்)

பாகத் தமிழ் நூற்கருத்துகளை எண்பொருளவாகச் செலச் சொல்லும் கல்வியறிவினையுடையராய்த் திகழ்ந்தார். மண முற்ற பொன்மலர் போன்று, காலப் போக்கினிலே 'கற்ேறார் அறியா அறிவினராய்க் கற்றோர்க்குத் தாம் வரம்பாய தலைமை யராய்'த் தமிழ் நலம் வாழ வழங்கினர். பொதுநலப் பணிக்கு இன்றியமையாத தூய மனமும், பொய்யாத நாவும் கல்வி, கேள்விகளிற் சிறந்த நல்லறிவும், தண்ணளியும் இவர் இயல் பாய் வாய்ந்தறிந்த தமிழவேள், இவரைத் தக்க உயிர்த் துணை யாகக் கொண்டொழுகவே, அவருக்குப்பின் இவர் சங்கத்துச் செவ்வேளாக விளங்கி, தமிழ் தழைக்கும் மாமுகிலாய் நிலவினர். உண்மையே உருக்கொண்டுலவியதென்ன விளங்கு மவர்பால், தமிழவேளின் குறிக்கோள் உயிர்பெற்று வாழ் வுற்றன. சங்கக் கல்வி நிலையங்களைத் தம் கண்களே போன்று போற்றி, அவைகளின் வளர்ச்சியினைப் பெரிதும் கருத்திற் கொண்டு உழைத்து, தம்மிரு கண்களின் மிக்கொளியையும், நிலையங்களுக்கு, அன்பினது வலிமைகொண்டே, ஈந்து காமுற்றார்.

ஐயா அவர்களது உள்ளம் எப்பாலும் கோடாது நடு நின்று உண்மையினைத் தேரும் நீர்மையது. யாவர் மாட்டும் பண்பொடு பழகி இணைந்தமைந் தொழுகும் நடை நலனு டையார். எத்தகையார் மாட்டும் தீதின்றித் தங்கோள் விடாது இனிதொழுகும் பண்புடையாளர். நினைவார் நினை தொறுந் தனது பெருமை, நிலைக்கு நிலை உயர்வும் சிறப்பும் மிகுமாறு நடந்துகொள்ளும் நீர்மையர். நயப்பாடும் தொடர்ப் பாடும் கொண்டுள்ள நடையழகால், பலரும் தம்மைச் சூழல் கொள்ள, அன்னரோடெல்லாம் ஏற்றபெற்றியொடு இணைந் தமைந் தொழுகுதலாய அரிய மென்மையினையுமுடையார். பழகுங் காலையிலும் அன்னரை மிக்க உணர்வாட்சியுடன், ஆதரவோடு கண்டு இனிதாகக் கட்டுரைத்தலும் அவரது இயற்கை வழக்கம். சிக்கலாகி வரும் நாட்டு வழக்குகளைத் தீர்த்து, முறைகாணும் உண்மைகளைத் தெளிந்த தலைமைக் குரலில் கட்டுரைத்து, ஏற்றத் தாழ்வு கருதாது, வருபவர்களது காரிய பெருமைக்குத் தகநடுவு நிலையின் பாலதாய் முடிவு கூறுவர். ஒரோவழி, துடுக்கான இடுக்கர் சிலர், சொல்லாடல் புரியவரின், சோர் விலாது வெடுக்கான எதிருரையின்றி அருள் மேவிய உள்ளத்தோடு, அவர் நாணி அகம்படிய, மென் சொல்லாலே மெய்ம்மை செப்புவார். தருக்கு தினையளவும் அவர்பால் எவரும் காணவியலாது.

பிறரை மதித்தொழுகும் இவரது மாண்பினையும் வனப்புச் செல்வமதையுங் கண்டு, ஐயா அவர்களை ஏணியாகப் பயன் படுத்திக் கொண்டு, நிலையில் உயர்ந்தார் பலர்; தோணி யாகவுங் கொண்டு உலகத்துயரின் எல்லையினைக் கடந்தாரும்

பலர். பணிசெய்து கிடப்பது இவரது ஆவியின் இயைபாகும். துன்பத்தை இன்பமாகக் காண்பர். அவ்வின்பத்தையும் உணர்வெழிலால் இகந்து அமைதியினிற் பேராது வைகவும் வல்லராய்த் திகழ்ந்தார். மலச் சிதைவாகிய 'பாசச்சயம் பண்ணுதலும்' அன்புருவமாதலுமே இவரது குறிக்கோள். ஆரவாரச் செயல்களை இம்மியும் விரும்பார்.

ஐயா அவர்கள் தவத்திரு வுடையார், சிறந்தது பழகும் தெளிவுடையார். தவஞானச் செல்வராய வாலையானந்த அடிகள்' சிவ தீக்கை நல்க, இறையொடு தம்முயிர் ஒற்றுமை யுறும் பற்றுப் பேரின்ப வழிகண்டு உலவாப் பேருண்மையினை உணர்ந்தார். உள்ளத்தை மடக்கி உண்முகமாகச் சிந்தனையில் ஆளும் இயல்பு கொண்டு' ஊன்றிய ஞானச் சார்புடையராய்த் திகழ்ந்து, தன்னலம் மறுத்து வாழும் தகைமையுற்றார். செம்பைப் பொன்னாகச் செய்வாரொப்பர் சீவனையும் சிவனாக யாக்கும் திறன் பெற்றார். நல்லாரைக் காண்பது நன்றென்ற மொழிக்கு இலக்காகப் பலர், இனிமைப் பாடும் தலைமைப் பாடும் நிரம்பிய பண்புடைய ஐயா அவர்களைக் காண்டலள வானே நலன் பல எய்தினரென்பது அறிஞர் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட மெய்ம்மையாகும். வெளியது உடுக்கும் வெண் கோலத்துடன் அறவுணர்வும் அருளொளியும் சிறக்கவும் என்றும் உளச் செம்மையோடு தூய வெண்ணீறு துதைந்து பொன் மேனியராய்ப் பொலிவார். ஊரைப் பறித்து அறச் சாலை கட்டி உயிர்கட்கருளுடையேம் என்பாருள்ள இவ் வையகத்தே அற நெறியில் நின்று அவ்வாற்றாற் பக்குவப் பட்டெழும் அருளைப் புரிவார். ஒப்புற வியல்புகளுடன், அறங் கரியாக, யாவர்க்கும் அகநேய புணர்வு கொண்டு உண்டி யளித்துண்ணும் சிறந்த அருள் வாழ்க்கையினராய் வாழ்ந்தார். மற்றும் கலையமுதும் செவி உணவும் வழங்கினர்.

'ஐயா' என்ற சொல், நல்லறிவும் நல்லொழுக்கமும் வாய்க்கப் பெறும்பெருமையும், தலைமைப் பண்பினையும் உற்ற வரை, வியப்பால் அழைக்கும் இயல்பினை உணர்த்தும். 'ஐதே காமம் யானே' என்றதில் 'ஐ' என்பது பெரிது, வியப்பு என்ற பொருள்களைக் குறிக்கும். மற்றும் முத்திற மெய்ப் புணர்ப்பாய் என்றும் நிற்கும் உயிர்த்தலைவனை 'ஐ' என்ற ஓரெழுத்தால் அழைப்பது பெருந்தமிழ் வழக்கு. உலகத் தலைவராய இறை, 'வேதங்கள் ஐயா என, வோங்கி ஆழ்ந் தகன்ற நுண்ணியன்? (ஐ+ஆ)

"என்னைமுன் நில்லன்மின் தெவ்வீர் பலரென்னை
முன்னின்று கன்னின்றவர், என்பதில் 'ஐ' என்பது"

தலைவன் எனப் பரிமேலழகர் உரை விரித்தார். இதன் கண்ணும் 'என் ஐ' என்பதினன் வேலும்; நில்லன்மின்'

என்பதனால் ஒன்றும், 'நின்றவர்' என்பதால் உடனும் உய்த்துணர்ந்து ஊன்றி நோக்குவார்க்கு உண்மை விளங்காமற் போகாது. எனவே சிறப்பாக 'ஐயா' எனும் சொல் தனித் தலைவர்களைக் குறிக்குமென்பது பெறப்படும். எனவே 'கணபதி ஐயா' என்றபோது அவரது தலைமைத் திறமும், இயம்புவாரின் வணக்கத்தின் இயல்பும் தெளிவுறும். இதனான் இவர், மக்களின் மிக்கராய் வயங்கித் தன் வயத்தனாதல் இயல்பாய்ப் பெறப்பட்டது காண்க.

இன்படைய வழி செய்யும் இயல்புடையாரை 'ஐயா' என அழைத்தல் சாலப்பொருந்து மாதலின், இவர் வரம்பிலின்ப முடையாரெனக் கருதப்படும். இன்பத்திற்கேதுவாக விருப்பது பகைமையின்மை பகைமைக்கு இடமாகுந் தன்மையிலார்க்கு மாயா சம்பந்த முள்ள மாய வுணர்வும், அவாவும் இல்லையாயிற் றென்க. இதனால், ஐயா அவர்கள், பொறிவாயிலாக எழும் ஐந்துணர்வையும் ஒழுக்க நெறியான் அவித்த அளிதருயாக்கையினை யுடையா ரென்பது உணரப்படும். ஐந்தவித்தான் ஆற்றல், புகழ்ச்சிக்குப் பெரிதும் உரித்தாதலின் இவர் பேராற்றலுடையாரென்ற உண்மை போதரும். பேராற்றலுடையார் சிறப்பியல்பு, விருப்பு வெறுப்பற்ற நிலையினைக் குறிக்கு மாதலான், இவர் இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கியோராவரென்பது அறியப்படும். இவர் பாசங்களினின்றும் நீங்கிய வழி அனைத்துயிர்க்கும் அருளும் நலனும், சுரக்கும் இயற்கை அறிவு முடையாராயினர். மற்றும் ஐயா அவர்கள் தம்மை நினைப்பார் நினைப்பறிந்து சார்ந்து நிற்கும் தூய முற்றுணர்வும் வாய்க்கப் பெற்ற அழகிய பேருளாளர். எனவே இவர் மக்கள்பால் மாறுத எண் வகையாய்க் கலந்து நின்று தனக்கேயுரிய ஒழுக்கத்துச் சிறப்புத் தன்மையின் யாதொரு குறைபாடிலாத ஓங்கிய புகழுடையா ரென்பது வெளிப்படும்.

எண் குணத்திறைவனது திருவடிகளை நாளும் ஐயா அவர்கள் பற்றிப் போற்றினராதலால், புவியில் வாழும் பழி விட்டகல, இறை கழல் எய்தி இன்புற்றிருப்பதே மேலாமெனக் கருதி, அத்தகைய கருத்தில் திளைத்தும், தன்பால் இறவாத அன்புடைய உழுவலன்பர் துயர் பொறுப் பெற்றிமையும் நினைந்தும், கரந்தையிலே கரந்து நிற்கின்றனர் என்பது தெளிவு. கரந்து நிற்பினும், கண்ணுரைத் தலைவனை நனிகாணுது, தமிழ்ச் சங்கம் ஒரு தவத்திருபுரவலரை இழந்தது. சைவம் ஒரு நாயன் மாரை இழந்தது: வைணவம் ஒரு ஆழ்வாரை இழந்தது. தமிழகம் நடு நிலையிற் பிழையாத ஒரு தனிச் சான்றேரை இழந்தது. எம்முள்ளத்தை ஆற்றுவதாக உள்ளது எது? அந்தோ! ஆற்ற கில்லேன்! எங்கள் ஐயாவே!

# ஆன்றவிந் தடங்கிய மேலோர்

புலவர். ந. இராமநாதன்

காலஞ் சென்ற கணபதி பிள்ளையவர்கள் நம் சங்கம் தோன்றுவதற்கு முதலாக நின்றவர்களுள் முதன்மையானவர் ஆவர். இளமை முதற்கொண்டே எதனையும் ஆழ்ந்து சிந்திப்பதிலும் தாம் சிந்தித்துக் கண்ட முடிபுகளை வாழ்விற் கிடைப் பிடிப்பதிலும் உறுதிப்பாடுடையராயிலங்கினர். தோற்றத்தில் எளிமையும், இன்முகத்தோடு கூடிய இன்சொலும் என்றினைய பண்புகள் கண்டாரைத் தன் வயமாக்கும் முழு ஆற்றல் பெற்று அவர்பால் இலங்கின. தூய வெண்ணிற உடையும் திருவெண்ணீறு பொலியும் நெற்றியும், பொன்மய மான உடம்பும், அவர் குணங்கட்கு அணிசெய்வன போல் அமைந்திருந்தன. யாரிடத்தும் பணிவுடைமையோடு கூடிய இன்சொலாடும் திறம் அவர்பால் சிறந்து விளங்கிற்று. அவரைக் காணச் சென்ற யாவரும், அவருரையால், பழகும் பழக்க முறையால் இழுக்கப் பெறுமல் வெளிவந்ததேயில்லை. இத்தகைய இயல்புகள் வாய்ந்த பிள்ளையவர்கள் தமிழவேள், காலஞ்சென்ற பிறகு 1941-ஆண்டு முதல் அவர் விருப்பப்படி சங்கக் கல்வி நிலையங்களின் தாளாளராகவும், சங்கப் பொருளாளராகவும் வீற்றிருந்து செயல் புரிவாராயினர். அவர்கள் வாழ்வின்பங்களைத் துறந்து மக்களினத்திற்குக் கல்வியளித்தும் நோயுற்றவர்க்கு மருந்திட்டும், ஊட்டியும் நோய்போக்கி நலஞ்செய்யும் கிறித்தவக் குருமார்களைப் போலவே வாழ்வின் பங்களைத் துறந்து சங்க வளர்ச்சியில் முழுவதும் ஈடுபட்டுப் பெரிதும் உழைப்பாராயினர். அவருடைய முழு உழைப்பால், சங்கக் கல்வி நிலையங்கள் இன்று முழு வளர்ச்சி பெற்றுத் திகழ்கின்றன. இத்துறையில் அவர்கட்கிருந்த ஊக்கம் மிகப் பெரிதாகும்.

நல்ல தலைமைக் குணம் சான்ற தண்ணளியாளர். தன்னைச் சார்ந்து வாழ்வோர் மற்றவரால் குறை சொல்லப் பெறுவதைப் பொறுத்துக் கொள்ளா இயல்பினர். சில சமயங்களில் அவர்கள் செய்யும் குற்றங்களையும் தன் குற்றமாக ஏற்றுக் கொள்வதோடு அவ்வாறே நின்று தாங்கும் சிறப்புடையவராகவும் விளங்கினர். நண்பர்களிடம் பழகுவதையும், அவர்கள் சூழ்ந்திருக்க வீற்றிருப்பதையும் எப்போதும் விரும்பும் இயல்புடையராயிருந்தார். தன்னொடு பழகியவர் கற்றவராகவிருப்பினும், அல்லது கல்விக் குறையுடையராகவிருப்பினும் ஒக்க மதித்து ஒழுகும் பெருமைக் குணம் சான்றவராகத் திகழ்ந்தார். நண்பர்கள் அறிந்தோ அறியாமலோ பேசும் எவ்வகைப்

பேச்சும் அவருக்கு உவப்பை நல்கும். ஐயா அவர்கள் ஆங்லகி இலக்கியங்கள், தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள் ஆயவற்றில் தக்க புலமையும் பற்றும் உடையவர்கள். சமயக் கோட்பாடுகளில் நல்ல தெளிவான கருத்துடையவர். பகட்டான சமய வேடமும் பேச்சும், எல்லாம் அறிந்தவர் போன்ற தருக்குரைகளும் அவருக்குச் சிறிதும் பிடிக்காது. எல்லாவற்றிலும் ஆழ்ந்த புலமை வேண்டுமென்று எண்ணுவார். அவருக்கிருந்த இயல்பான புலமையும் அறிவுமே அவரைப் புலனடக்கம், தண்ணளி முதலியன உடையவராகச் செய்தன என்றால் மிகையாகாது. ஆன்றவிந்தடங்கிய சான்றோர் என்று ஏடுகளில் பயில்கின்றோம். வாழ்விற் காணமுடியவில்லை. ஆனால் ஐயா அவர்களை ஆன்றவிந்தடங்கிய சான்றோர் என்றால் அறிந்தவர் ஒப்பவே செய்வர். இவ்வளவு புலமையிருந்தும் ஒன்று மறியார்போல அடக்கமாகப் பலரிடையில் மணிக்கணக்கில் வீற்றிருப்பது அவருடைய இயல்பான பழக்கம். நண்பர்கள் அறியாது கூறும் உரைகளையும் அமைதியாக எவ்வகையான கலவரமுமின்றிக் கேட்டுக்கொண்டேயிருப்பார். யாரொடுங் கொள்ளா, பொழுதொடும் புணரா, பொருளறிவாராவாயினும் மக்கள் மழலை பெற்றவருக்கின்பமளிக்கும் என்று ஔவையார் கூறுவதுபோல, ஐயா அவர்கட்கு நட்பினர் பேசும் பொருளில்லா உரைகளும் மகிழ்வையே செய்யும்.

விருந்தோம்புங் குணத்தில் மிகவும் சிறந்தவராக இலங்கினர். "விருந்திலா உண்டியேலாய்"...என்று கல்லூரி விரைவுரையாளர், திரு. பாலசுந்தரம் பாடியதுபோல எப்பொழுதும் விருந்தினர் சூழ உணவுண்பது அவருடைய வாழ்வின் இயல்பான நிகழ்ச்சியாகும். அவர் வாழ்வில் பொருளை ஒரு பொருளாக மதித்ததில்லை. பொருளைப் பல்லாற்றானும் சேர்த்துச் செல்வராக வாழ எண்ணியதில்லை. அவர் வாழ்வில் ஈட்டிய பொருள்களைத் தன்னுடன் நெருங்கிய உறவினருக்கோ மற்றவர்க்கோ வழங்காமல் நண்பர்கட்கே ஈந்து வாழ்ந்தனரென அறிகின்றோம். பொருட் பற்று இல்லாதவர்கள். இயல்பாக பலவகையான குற்றங்களினின்றும் நீங்கி விடுகின்றனர். குற்றஞ் செய்வோரில் பெரும்பாலோர் பொருளுக்காவே செய்கின்றனர். பொருட்பற்றுக் குறையக் குறைய மனிதன் குற்றம் செய்வதினின்றும் தப்பிவிடுகின்றான். தன் பெண்டு தன் பிள்ளை சோறு வீடு சம்பாத்தியம் இவையுண்டு தானுண்டு என்ற வாழ்வு இவர் வாழ்ந்ததில்லை. ஒல்லும் அளவில் மற்றவருக்குப் பலவகையானும் உதவி வாழ்வதில் இவர் வாழ்வு கழிந்தது. உடம்பின் பயனை நல்வாழ்வின் மூலம் முழுவதும் அடைந்தவர் இவர் என்று கூறலாம். இவருடைய முடிவும் எவ்வகையான மனச்சலிப்பும், அரற்றலும் அழுங்கலுமின்றி, உறங்குவது போலும்

சாக்காடு" என்று வள்ளுவர் கூறியது போல இனிமையாக நிகழ்ந்ததை அருகிருந்தோர் கூறினர். சாதலிலும் இனிமையை நுகர்ந்தவர் என்று கூறலாம்.

புத்தரை மணிமேகலையாசிரியர் "காமற் கடந்தவாமன்" என்று பாராட்டுவர். காமங் கடந்து ஐந்தவித்துவாழ்தல் எளிதன்று. புறப்பகைகளையெல்லாம் அடக்கும் ஆற்றலுடையாருக்கும் உட்பகையாகிய காமம் அடக்க முடியாதது "என்று பரிமேலழகர் இவ்வொழுக்கத்தின் அருமைப் பாட்டை மொழிவர். மனைவியை யிழந்த சில நாளிலேயே மறுமணம் தேடி இளம்பெண்ணை மணந்து வாழ்நாளெல்லாம் வீணாளாகக் கழிக்கும் அறிஞர்களையும் அறிவோம்.

ஐயா அவர்கள் புலனடக்கத்துடன் பல ஆண்டுகள் வாழ்ந்த வாழ்வின் சிறப்பை என்னென்று கூறுவது! இவருடைய அழுத்தமான உளவன்மையை இத்துறையில் காணலாம். இவருடைய பொன்மயமான உடலும் பூரித்த புன் சிரிப்புடன் விளங்கும் முகமும் இவர்மேற் கொண்டு வாழ்ந்த தூயவாழ்வின் மேன்மையைப் புலப் படுத்தும். இவரைத் திரு. கரந்தைக் கவியரசு, இரா. வேங்கடாசலம் பிள்ளையவர்கள் அ. கணபதி யென்றால் அழுத்தக் கணபதி யென்று வேடிக்கையாகவும் அதே சமயத்தில் அவர் உள இயல்பைப் புலப் படுத்தும் நெறியிலும் மொழிவர்.

தேவாரம், பழங்கால நாடகம், நாட்டுப்புறப் பாடல், இவைகளில் ஐயா அவர்கட்குப் பற்று மிகவுண்டு. சிறுத் தொண்டர் நாடகம் ஐயாவுக்குப் பிடித்தமான நாடகம். சிறுத்தொண்டர் நாடகம் உலகியலுக்குப் பொருந்தாததாக விருந்தாலும் அது அவர் மேற்கொண்ட அறத்தில் அவருக் கிருந்த ஊக்கத்தைக் காட்டுகின்றது. தான் நல்லதென மேற்கொண்டவற்றை எத்தகைய இடுக்கண் நேரினும் கொண்டு செலுத்தும் ஐயா அவர்களின் உள்ள உறுதியே சிறுத் தொண்டர்பால் பற்றுக்கொள்ளச் செய்ததென்னலாம். மேலும் சிறுத்தொண்டர் உள்ளத்தால் திண்ணியராயினும் வாழ்வில் மிகவும் எளிமை உடையவர். அவருடைய பெயரே இதனைக் காட்டுகின்றது. ஐயா அவர்களும் எளிமையை விரும்புகின்றவர்.

அரசியலில் தமிழ்மக்கள் முன்னேறித் தமிழகத்தை ஆளும் திறன் பெறவேண்டுமென்னும் கருத்துடையவர். யாரும் அவரவர் விருப்பப்படி ஒரு கொள்கையைப் பின்பற்றவோ விடவோ செய்ய விட்டுவிட்டு விலகியிருக்கும் இயல்புடையவர். தனக்கெனவொரு கொள்கையை வைத்துக் கொண்டு எல்லோரும் அதனைப் பின்பற்ற வேண்டுமென்று

விரும்பார்தவர். அரசியலில் தனக்கு வேறுபட்ட கொள்கை யுடைய தலைவரிடமோ, அவரைப் பின்பற்றுவாரிடமோ வெறுப்புடையவராக விளங்கரார். இதனால் கருத்துவேறு பாட்டை மதிப்பவரென உணரலாம்.

தமிழ்மொழி மீது அவர்கட் கிருந்த பற்றும் மதிப்பும் அளவிடற்கரியது. தனித் தமிழ் பேசுவதிலும், எழுதுவதிலும் இலங்க வேண்டுமென்னும் குறிக்கோளுடையவர். 'ஆங்கில மொழியில் புலமையுடையவராக இலங்கினாலும், அவர் உரை யாடுங்கால் ஆங்கிலச் சொற்கள் விரவாமல் அம்மொழி அறியா தவர் போல உரையாடுவர். அவர்கள் எழுதுவதும் சொற் பொழிவாகப் பேசுவதும் அருமை. ஆனால் உரையாடுங்காற் பேசும் சில தொடர்களும் 'மிகவும் உணர்ச்சியுடையதாகவும் பொருளுடையதாகவும் இருக்கும். ஒருமுறைக் கவியரசைப் பற்றி உரையாடும்போது பின்வருமாறு குறிப்பிட்டார்.

இது மிகவும் உயர்ந்த சாதிப் பசுதான்; தீனி மிகுதி யாகத் தின்னும்; ஆனால் பால் கொஞ்சமாகத்தான் கறக்கும்" என்றார். கவியரசு தனக்கிருந்த புலமையளவிற்குப் பல நூல்கள் எழுதவில்லையேயென்ற குறையை இவ்வாறு மொழிந்தனர். தமிழிலக்கியத்திலும் தமிழை வழக்காற்றில் கையாளுவதிலும் ஐயா அவர்கட்கு நல்புலமையுண்டு. அவர்கள் அறிஞர்களையும் மயக்கும் சில குறிப்புக்களை வினவக் கேட் டிருக்கின்றேன். சான்றாக அவர் வினவிய திருக்குறள் ஒன்றைக் காட்டுகின்றேன்.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

இக்குறளில் "மலர்மிசை ஏகினார்" என்பது இறைவனின் பெயர். அவனுடைய மாட்சிமை பொருந்திய அடிகளை அடைந்தவர் நிலத்தின் மீது நீண்டகாலம் வாழ்வர் என்பது பொதுவாக நோக்கும் நமக்குப் படும் பொருள். இறைவன் அடியைச் சேர்ந்வதர் மீண்டும் நிலமிசை இருத்தலும் வாழ்த லும் பொருந்தாது. அடிசேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்தலில் உள்ள சிக்கலைப் பரிமேலழகர் சிந்தித்தார். ஆகவே அவர் வேறு பொருள் கண்டார். இவ்விடத்தை நுணித்தறிந்த ஐயா அவர்கள் இதனைக் கேட்டனர். நல்லவேளையாகப் பரிமேலழகர் கண்டவுரை என்னுடைய நினைவிலிருந்தது. அடி சேர்ந்தார் என்பதற்கு அடியை நினைத்துக் கொண் டிருப்பவரெனவுரை கூறினார். இவ்வாறு அடியை நினைத்துக் கொண்டிருப்பவர் நிலவுலகில் நீண்டுவாழ்வார் என்பதில் சிறப்பில்லை. அறிந்த பெரியவர்கள் இவ்வுலக வாழ்வை விரும்பவில்லை. இவ்வுலகில் வாழ்தலே இறைவன் அடியை

நினைப்பவருக்குப் பயனென்றால் அடியவர்களின் குறிக் கோளுக்கு மாறாகிவிடும். பிறவி வேண்டாமையும் இவ்வுலக வாழ்வின்பற்றை விடுதலும் தேர்ந்த அடியவர் கண்ட முடிபா கும். இவைகளை நன்குணர்ந்த பரிமேலழகர் "நிலமிசை நீடு வாழ்வார்" என்பதற்கும் வேறுபொருள் கண்டார். நிலமிசை என்னுந் தொடரை மிசை நிலம் என்று மாற்றிக் கொண்டார். அதாவது நிலத்திற்கும் மேலாகிய வீட்டுலகம் என்பது பொருளாகும். இதனால் இறைவன் அடியை நினைப் பவர் வீட்டுலகத்தில் நீண்டகாலம் வாழ்வார் என்பது கருத்தா கின்றது. இன்னுமொரு சிக்கலும் இப்பொருளுரைப்பதால் உண்டாகின்றது. நீடுவாழ்தலும் குறையவாழ்தலும் உலகில் உண்டு. ஆனால் வீட்டுலகத்தில் இவ்விரண்டும் இல்லை. நிலவுல கத்தில் தானுண்டு. இவ்வியல்பினை வீட்டுலகில் சேர்த்துக் கூறுவது பொருந்தாது ஆகவே இவ்விடத்தில் பரிமேலழகர் வேறுபொருள் கூறவேண்டியவரானார். அவர் நீடுவாழ்வார் என்பதற்கு அழிவின்றி வாழ்வாரென வுரைகூறினார். இவ் வுரையால் நாமறியும் கருத்து இறைவனடியை நினைத்துக் கொண்டிருப்பவர் வீட்டுலகத்தில் அழிவின்றி எக்காலத்தும் ஒரே தன்மையில் வாழ்வார் என்பது கருத்தாகின்றது. இப் பாடலின் கருத்தினை அறிந்தவரும் இவ்வளவு ஊன்றிக் காண மாட்டார்கள். இவ்வுரை நுட்பத்தை ஐயா அவர்கள் நுட்ப மாகக் கண்டு உசாவினர். இதனால் அவருடைய நுண்ணிய புலமை புலனாகின்றது.

நம்முடைய வாழ்வில் வழக்காற்றில் பல பிழைகளை மொழியைக் கையாளுவதில் செய்கின்றோம். இது ஐயா அவர்கட்குப் பிடிக்காது. பிழையறப் பேசுவதும் எழுது வதும் வேண்டுமென்பது அவர்கருத்தாகும். எளிமையாக எல்லோரும் கையாளும் தவறொன்றை அவர் சுட்டிவினாவினார். அது வருமாறு.

"இந்தச் சுவற்றில்" ஒட்டாதே. இத்தொடர் மொழியில் "சுவற்றில்" என்பது பிழைபட்ட மொழியாகும். சுவரில் என்று தான் எழுதவேண்டும் சுவர் என்பதே சொல்லாகும். சுவரும் 'இல்' என்னும் வேற்றுமையுருபும் சேரும்போது சுவரில் என்றுதான் வரும். "சுவற்றில்" என்ற சொல்லின் அடியாக நிற்பது சுவறு என்ற சொல்லாகும். ஆகலின் பிழைபட்ட தாகின்றது. இவ்வாறு ஐயா அவர்கள் வாழ்விற்கண்டு கூறிய உண்மைகள் பலவாகும். இந்தச் சுவர் என்பதும் தவறாகும். அந்த இந்த என்பன சுட்டடியாக வந்த பெயரெச்சங்கள். இவை அகர ஈற்றுப் பெயரெச்ச மாகலின் அவற்றிற்கு முன்னர் வரும் வல்லினம் மிகாமல் வருதல் வேண்டும். "இந்த

சுவரில் ஓட்டாதே" என்பதே பிழையற்ற மொழித் தொடராகும்.

உலகில் மனிதன் என்று மதித்தற்குப் பொருளாக நிற்பது மனிதனின் குணங்களேயாகும். உடம்பும், உடம்பின் உறுப்புக்களும் மனிதன் என்று மதித்தற்குரியவையல்ல. அவை அக்குணங்களைத் தாங்கி நிற்பதால் அவைகளும் மதிக்கப் பெறுகின்றன. உயிர்போனவரைப் பற்றி நினைந்து வருந்துவதெல்லாம் அவருடைய உடம்பிற்காகவன்று. உடம்பிற்காக அழுவதாயின் உடம்பு இறந்த பிறகும் இருக்கின்றது. ஆதலின் அதனையே கெடாமல் மருந்து முதலியவைகளால் பேணிக் கொண்டிருக்கலாம். எவ்வளவுதான் பேணினாலும் இறந்த மனிதனை அவன் உடம்பு ஆவதில்லை. இதனால் நாமறிவது உடம்பைப்பற்றி நிற்கும் அரியகுணங்களே மனிதனை மனிதனை மதிக்கச் செய்கின்றது. என்பதற்கும் அத்தகையகுணங்களை நினைந்தே வருந்துகின்றோம்.

குணங்களைத் தனியே காண்டல் இயலாது. அவைகளைப் பொருள்களின் துணைகொண்டே காண்டல் இயலும். அன்புடைமை—இன்சொலுடைமை—பொய் கூறாமை அழுக்காறுமை—போன்ற பண்புகள் மனிதனிடமே காணமுடியும். மனிதன் இறந்தவுடன் அவைகளும் மறைகின்றன. மனிதனின் செயல்கள் மூலமே நற்பண்புகளையுணர முடிகின்றது. இம் முறையில் ஐயா அவர்களை எண்ணும் போதும் அவருக்கென அமைந்த சிறந்த குணங்கள் இப்போது மறைந்து விட்டன. அவரைக் காணும் போதெல்லாம் அவருருவில் அப்பண்புகள் புலனாயின. என்று அவருடைய செயல் ஒடுங்கிற்றோ அன்றே அவருடைய பண்புகளும் ஒடுங்கி விட்டன. இக் கருத்தினைக் கொண்டே நந்திக் கலம்பக ஆசிரியர்

"வானுறுமதியை அடைந்ததுன் வதனம்
வையக மடைந்த துன்கீர்த்தி
கானுறு புலியை அடைந்த துன்வீரம்
கற்பக அடைந்தவுன் கரங்கள்........."

என்று பாடுவாராயினர்.

ஐயாவிடம் சிறந்து விளங்கிய உளத்திண்மை, செயற்றிறம். இன்சொலுடைமை, அன்புடைமை, பொறையுடைமை, ஆயகுணங்களும் இக்குணங்கள் குடிகொண்டிருந்த கோயிலாக விளங்கிய அவர் உளமும், உடலும், முகமும் மறைந்தன. அவர் மீது அன்பு செலுத்தும் நாம் அவர் குணங்களில் ஒல்லுமளவில் நம் வாழ்வில் மேற்கொண்டு நிற்போமாக.